# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2065/29 - 2018 අප්‍රේල් මස 04 වැනි බදදා - 2018.04.04

*2065/29 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

வட மாகாண மாகாண சபை

*2017 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, வட மாகாண அடகுபிடிப்போர் நியதிச்சட்டம்*

வட மாகாண, மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2017 ஆந் ஆண்டின் 06 ஆம் இலக்க, வட மாகாண அடகுபிடிப்போர் நியதிச் சட்டத்திற்கு வட மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

க. தெய்வேந்திரம்,<br>
செயலாளர்,<br>
பேரவைச் செயலகம்,<br>
வட மாகாண சபை.

பேரவைச் செயலகம்,<br>
ஏ 9 வீதி,<br>
கைதடி,<br>
2018, மாச்சு 27.

**வட மாகாணத்தினுள் அடகுபிடிப்போர் தொழிலை ஒழுங்குபடுத்துவதற்காகவும் அதனோடு தொடர்புபட்ட அல்லது விடயங்களுக்கான அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு நியதிச்சட்டம். இந்நியதிச்சட்டம், (99 ஆம் அத்தியாயமான) அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவுள்ளது.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக-

பாகம் I

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இச்சட்டம் வட மாகாண மாகாணசபையின் 2017 ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க, வடமாகாண அடகுபிடிப்போர் நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வடமாகாண ஆளுநர் எந்தத் திகதியன்று அது நடைமுறைக்கு வருவதற்கான அவரது சம்மதத்தை அளிக்கக்கூடுமோ அந்தத் திகதியன்று அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

இந்நியதிச்சட்டத்தின் ஏற்புடைமை.

2. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள், வங்கிகள் தவிர்ந்த வேறு எவரேனுமாளினால் கொண்டு நடாத்தப்பட்ட அடகுபிடிப்போர் தொழிலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பாகம் II

**பதிவுசெய்தலும் உரிமமளித்தலும்**

அடகு பிடிப்ப வரொருவரைப்பதிவு செய்தல்

3. ஆளெவரும், வட மாகாணஇறைவரி ஆணையாளரிடம் (இதனகத்துப்பின்னர் **"மாகாணஆணையாளர்"** எனக் குறிப்பீடு செய்யப்படும்) அடகுபிடிப்பவரொருவராகப் பதிவுசெய்யப்பட்டாலொழிய, அத்தகைய ஆள் அடகுபிடிப்பவர் தொழிலைக் கொண்டுநடாத்துதலாகாது.

பதிவு செய்யப் படுவதற்கான விண்ணப்பம்

4. (1) அடகுபிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு விரும்புகின்ற ஆளொவ்வொருவரும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் பதிவுக்காக மாகாண ஆணையாளருக்கு விண்ணப்பித்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இலங்கைப் பிரசையாகவிராத தனியாளொருவர் அல்லது வெளிநாட்டுக் கம்பனியொன்று அல்லது வெளிநாட்டு வர்த்தக நிறுவனம் ஒன்று, வடமாகாணத்தினுள் அடகுபிடிப்பவராகப் பதிவுசெய்யப்படுவதற்காக விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவராதல் அல்லது தகையற்றதாதல் வேண்டும்.

(2) ஆளெவரும் பின்வருமாறிருப்பின், அடகுபிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காகப் பதிவுசெய்யப்படுதலாகாது:-

(அ) அவர் ஏலவிற்பனையாளரொருவராகவிருப்பின்;

(ஆ) பதிவுக்கான விண்ணபத்தை அவர் எந்தத் திகதியன்று செய்கின்றாரோ அந்தத் திகதிக்கு நேர்முற்போந்த ஐந்தாண்டு காலப்பகுதியின் போது எந்நேரத்திலும் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பின்; அல்லது

(இ) மாகாண ஆணையாளரின் அபிப்பிராயத்தில்,அவ்வாள் எந்தக் கடையில் அல்லது எந்த இடத்தில் அடகுபிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உட்கருதுகின்றாரோ அந்தக் கடை அல்லது இடம், அல்லது அவரினால் உடைமை கொள்ளப்பட்ட அருகாமையிலுள்ள ஏதேனும் வீடு அல்லது இடம், அடகுபிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குப் பொருத்தமானதல்லதாகவிருப்பின்.

அடகு பிடிப்பவர் தொழிலுக்கு உரிமமளித்தல்.

5. (1) இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற திகதியன்றும் அதன்பின்னரும், 4 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளெவரும், அந்நோக்கத்துக்காக மாகாண ஆணையாளரினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, அடகுபிடிப்பவர் தொழிலில் ஈடுபடுதலாகாது.

(2) நான்காம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொவ்வொருவரும், ஒவ்வொரு தொழிலிடத்துக்கும் அதன் கிளைக்கும் தனிவேறான உரிமத்தைப் பெறுவதற்குத் தனிவேறான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) அனைத்து அனுமதிப்பத்திரங்களும் திகதியாக அது விநியோகம் செய்யப்படும் திகதியைக் கடைப்பிடிக்க வேண்டியதுடன் அதன் உடனடுத்துவரும் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் அதன் செல்லுபடியாகும் காலம் முடிவடைகின்றது.

(4) மாகாண ஆணையாளர், அடகுபிடிப்பவர் தொழில்தொடர்பில் உரிமமொன்றை வழங்குவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழான தமது அதிகாரத்தை எழுத்தில் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குக் கையளிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*உரிமத்துக்கான விண்ணப்பமும் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்முறைப்படுத்துதலும்.*

6. (1) நான்காம் பிரிவின்கீழான உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் மாகாண ஆணையாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் தேவைப்பட்ட எல்லா விபரங்களும் பற்றிய பூரணமான மற்றும் செம்மையான தகவலைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) (அ) அடகுபிடிப்பவர் தொழிலொன்று தனியாளொருவரினால் கொண்டு நடாத்தப்பட்டு அவர் இறப்பதன்மேல் அத்தகைய அடகுபிடிப்பவர் தொழிலை ஆளொருவருக்கு மாற்றளிப்பதற்கு அவர் உட்கருதினால், அத்தகைய தனியாள், 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆளொருவரைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் கொண்டுள்ள ஆவணமொன்று, (1) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். அத்தகைய ஆவணம் இருதறத்தவர்களினாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) அடகுபிடிப்பவர் தொழில், கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத எவரேனும் ஆட்கள் குழுவொன்றினால் கொண்டுநடாத்தப்படுமிடத்து, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத அத்தகைய ஆட்கள் குழு, அச்சான்றிதழின் அல்லது உடன்படிக்கையின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) உட்பிரிவு 1 இன்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் அடங்கியுள்ள தகவலையும் விபரங்களையும் கவனத்தில் கொண்டதன்மேல், பிரிவு 4 இன் கீழ் உரிமமொன்று வழங்கப்படுவதற்கான பொருத்தமானதன்மை பற்றி விதித்துரைக்கப்பட்டவாறான தேவைப்பாடுகளை விண்ணப்பகாரர் நிறைவேற்றியுள்ளாரென மாகாண ஆணையாளர் திருப்திப்படுமிடத்து, இந்நியதிச்சட்டத்துக்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவம் ‘அ’ இல் அத்தகைய உரிமத்தை அவர் வழங்குதல் வேண்டும்.

(6) பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது பிழையான தகவலை அல்லது விபரங்களைக் கொண்டுள்ளதாகக் காணப்படும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

*பிணைப்பொறுப்பு*

7. (1) ஒவ்வோர் அடகுபிடிப்பவரும், உரிமம் கிடைக்கப்பெற்றபின்னர் உடனடியாக ஆனால் அடகுபிடிப்பவர் தொழிலைத் தொடங்குமுன்னர், விதித்துரைக்கப்பட்ட தொகையைப் பிணைப்பொறுப்பாக விதித்துரைக்கப்பட்ட முறையில் மாகாண ஆணையாளரிடம் வைப்பிலிடுதல் வேண்டும்.

(2) தொழில் மூடிவிடப்படும் அல்லது மாற்றளிக்கப்படும் பட்சத்தில், (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வைப்பிலிடப்பட்ட பணத்தொகை, அத்தகைய அடகுபிடிப்பவரினால் பொருட்களை அடகுவைப்பவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தொகையைக் கழித்தபின்னர், அத்தகைய அடகுபிடிப்பவருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

*உரிமத்தின் படிவமும் கால எல்லையும்.*

8. ஆறாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று-

(அ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்;

(ஆ) உரிமத்தில் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அத்துடன்

(இ) முன்னர் இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

ஓர் உரிமத்தைப் புதுப்பித்தல்.

9. (1) ஆறாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று, முன்னர் வழங்கப்பட்ட உரிமம் முடிவுறும் திகதிக்கு முன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல் விதித்துரைக்கப்பட்ட புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்து விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் மாகாண ஆணையாளருக்கு அந்நோக்கத்துக்கான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுவதன்மேல் புதுப்பிக்கப்படலாம்.

(2) நேர்முற்போந்த நிதியாண்டுக்காக அத்தகைய அடகுபிடிப்பவரின் தொழில் பற்றிய விண்ணப்ப ஆண்டுக்கு முன்னைய வருடாந்தக் கணக்குக்கூற்றின் பிரதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமத்தைப் புதுப்பிப்பதற்காகச் செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(3) மாகாண ஆணையாளர், பின்வரும் சந்தர்ப்பங்களில், (1) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பத்தைப் பெற்றதன்மீது உரிமமொன்றைப் புதுப்பிக்கலாம்:-

(அ) உரிமம் பெற்றவர், வழங்கப்பட்ட உரிமத்தின் நியதிநிபந்தனைகளை மீறாதுள்ளவிடத்து அல்லது அவற்றுக்கு முரணான எதனையும் செய்யாதுள்ளவிடத்து;

(ஆ) உரிமம் பெற்றவர், இந்நியதிச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளை மீறாதுள்ளவிடத்து;

(இ) உரிமம் பெற்றவர், அத்தகைய உரிமத்துக்கான விண்ணப்பத்தை அவர் செய்கின்ற திகதிக்கு நேர்முற்போந்த ஐந்தாண்டுகளின்போது,எந்நேரத்திலும் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டிராதவிடத்து;

(ஈ) மாகாண ஆணையாளரின் அபிப்பிராயத்தில், அடகுபிடிப்பவர் தொழிலை அவ்வாள் எந்தக் கடையில் அல்லது இடத்தில் கொண்டு நடாத்துவதற்கு உட்கருதுகின்றாரோ அந்தக் கடை அல்லது இடம், அல்லது அவரினால் உடைமைகொள்ளப்பட்ட அருகாமையிலுள்ள ஏதேனும் வீடு அல்லது இடம், அடகுபிடிப்பவர் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குப் பொருத்தமானவிடத்து; அல்லது

(உ) அத்தகைய உரிமம் வைத்திருப்பவர் ஏதேனும் விண்ணப்பத்தைச் செய்யும் போது, மற்றும் அவரது அடகுபிடிப்பவர் தொழில் தொடர்பாக, இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளினது மெய்க்கருத்துக்கும் நோக்கங்களுக்கும் முரணாகவுள்ள செயல்முறைகளைக் கையாளவில்லையென மாகாண ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்து.

(4) இப்பிரிவின்கீழான புதுப்பித்தலின்மீது வழங்கப்பட்ட உரிமமொன்று தொடர்பில் 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

உரிமமொன்றை இடைநிறுத்துதல்.

10. ஆறாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று பின்வரும் சந்தர்ப்பங்களில் மாகாண ஆணையாளரினால் இடைநிறுத்தப்படலாம்:-

(அ) உரிமம் பெற்றவர், இந்நியதிச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் தவறொன்றைப் புரிந்தமைக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(ஆ) உரிமம் பெற்றவர், இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளை மீறியுள்ளவிடத்தும், அத்தகைய மீறுகையின் பாரதூரமானதன்மை உரிமத்தை இரத்துச் செய்தலைத் தேவைப்படுத்தாதவிடத்தும்.

உரிமத்தை இரத்துச் செய்தல்.

11. (1) ஆறாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று பின்வரும் சந்தர்ப்பங்களில் மாகாண ஆணையாளரினால் இரத்துச்செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது செம்மையற்ற தகவலை வழங்குவதன்மூலம் உரிமம் பெறப்பட்டுள்ளதெனக் காணப்படுமிடத்து;

(ஆ) உரிமம் பெற்றவர் இந்நியதிச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்கு, அல்லது அவரது தொழிலிலான ஏதேனும் மோசடிக்கு அல்லது பண்டங்கள் களவாடப்பட்டவையெனத் தெரிந்துகொண்டு அவற்றைப் பெறுகின்றமைக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து;

(இ) உரிமம் பெற்றவர் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டுள்ள விடத்து;

(ஈ) உரிமம் பெற்றவர் இந்நியதிச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறியுள்ளவிடத்து; அல்லது

(உ) உரிமம் பெற்றவர், அத்தகைய உரிமம் எந்த நியதிநிபந்தனைகளுக்கமைய வழங்கப்பட்டதோ அந்த எவையேனும் நியதிநிபந்தனைகளுக்கு மீறுதலாக அல்லது அவற்றுக்கு முரணாகச் செயலாற்றியுள்ள விடத்து.

(2) வழங்கப்பட்ட உரிமமொன்று, பிரிவு 10 இன் கீழ் அல்லது இப்பிரிவின்கீழ், விடயத்துக்கேற்ப, இடை நிறுத்தப்படுமிடத்து அல்லது இரத்துச்செய்யப்படுமிடத்து, உரிமம் பெற்றவரினால் கொடுக்கப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்பப்பட்ட எழுத்திலான தொடர்பாடலின்மூலம், அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இரத்துச் செய்கை பற்றி உரிமம் பெற்றவருக்கு உடனடியாக அறிவிப்பது மாகாண ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

12. விடயத்துக்கேற்ப, 6 ஆம் பிரிவின்கீழ் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் ஓர் உரிமத்தை வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் மறுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய மறுப்புக்கான காரணங்கள் மாகாண ஆணையாளரினால் பதியப்படுதல் வேண்டும். அத்தகைய மறுப்புக்கான காரணங்களை விண்ணப்பத்திற் காணப்படும் முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்பப்பட்ட எழுத்திலான தொடர்பாடலின்மூலம் முப்பது நாட்காலப்பகுதியினுள் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்கின்ற ஆளுக்கு அறிவித்தல் மாகாண ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

காரணங்கள் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

13. (1) விடயத்துக்கேற்ப, உரிமமொன்றை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுக்கின்ற முடிபினால் அல்லது வழங்கப்பட்ட உரிமமொன்றை இடைநிறுத்தியமையினால் அல்லது இரத்துச் செய்தமையினால் இன்னலுறும் எவரேனுமாள், விடயத்துக்கேற்ப, மறுப்பு அல்லது இடைநிறுத்துகை அல்லது இரத்துச்செய்கை பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்ற எழுத்திலான தொடர்பாடல் பெறப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அமைச்சரினால் நியமிக்கப்படும் மீளாய்வுச் சபைக்கு அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

மேன்முறையீடுகள்

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீதான முடிபு, அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்டதிலிருந்து அறுபது நாட்களினுள் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டைச் செய்கின்ற ஆளுக்கு அதன்மீது செய்யப்பட்ட முடிபு பற்றி உடனடியாக அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(3) மீளாய்வுச் சபை தோதானதெனக் கருதுமிடத்து,உட்பிரிவு 1 இன் கீழ் அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது ஏதேனும் முடிபைச் செய்யுமுன்னர், விடயத்தின் சூழ்நிலைகளில் அவசியமெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய விசாரணையை நடாத்தலாம்.

(4) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது மீளாய்வுச் சபையின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

14. (1) அத்தகைய அடகுபிடிப்பவர் தொழில் எந்த இடப்பரப்பினுள் கொண்டுநடாத்தப்படுவதற்கு உட்கருதப்படுகின்றதோ அந்த இடப்பரப்புக்குப் பொறுப்பாகவுள்ள காவல்துறை கண்காணிப்பாளருக்கு மேலேயுள்ள பிரிவு 6 இன் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் பிரதியை மாகாண ஆணையாளர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

உரிமத்தின் பிரதி பொலிசுக் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்படுதல்.

(2) விடயத்துக்கேற்ப, பிரிவு 10 ஆம் அல்லது 11 இன் கீழ் உரிமத்தின் அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இரத்துச்செய்கை பற்றி அத்தகைய அடகுபிடிப்பவர் தொழில் எந்த இடப்பரப்பினுள் கொண்டு நடாத்தப்பட்டதோ அந்த இடப்பரப்புக்குப் பொறுப்பாகவுள்ள காவல்துறை கண்காணிப்பாளருக்கு அறிவிப்பது மாகாண ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

15. பிரிவு 6 இன்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை வைத்திருப்பவர், அத்தகைய உரிமம் எந்த அடகுபிடிப்பவர் தொழில் தொடர்பானதோ அந்த அடகுபிடிப்பவர் தொழிலை மாகாண ஆணையாளரின் எழுத்திலான அங்கீகாரமின்றிக் கைமாற்றுதலாகாது.

மாகாண ஆணையாளரின் முன்னங்கீகாரமின்றி உரிமத்தைக் கைமாற்றுதலாகாது.

16. உரிமம் பெற்ற அடகுபிடிப்பவரின் பெயர், தொழிலிடத்தின் பெயர், அடகுபிடிப்பவர் தொழில் கொண்டுநடாத்தப்படும் வளவுகளின் முகவரி என்பவற்றைக் கொண்டுள்ள அறிவித்தலொன்றை மாகாண ஆணையாளர் அரசாங்க வர்த்தமானியில் வருடாந்தம் வெளியிடுதல் வேண்டும்.

உரிமம்பெற்றவரின் விபரங்களை வெளியிடுதல்.

பாகம் III

## அடகுபிடிப்பவரின் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும்

இலங்கையில் இல்லாமை பற்றிய அறிவித்தல்.

17. மூன்று மாதங்களை விஞ்சுகின்ற ஏதேனும் காலப்பகுதியின்போது இலங்கையில் இல்லாமலிருப்பதற்கு உட்கருதுகின்ற அடகுபிடிப்பவர் ஒவ்வொருவரும்-

(அ) வெளிநாட்டுக்குச் செல்வதற்கான உட்கருத்துப் பற்றி மாகாண ஆணையாளருக்கு எழுத்திலான நியாயமான அளவு போதிய முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(ஆ) அவர் இலங்கையில் இல்லாதபோது அடகுபிடிப்பவர் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி ஆளொருவரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

அடடுகுபிடிப்பவரின் தொழில் நேரங்கள்.

18. அடகுபிடிப்பவரெவரும், ஏதேனும் நாளில் காலை. 8.00 மணிக்கு முன்னரும் மாலை 8.00 மணிக்குப் பின்னரும் அடகுக்காக ஏதேனும் பொருளை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

அடகுபிடிப்பவர் ஏல விற்பனை யாளாகச் செயலாற்றுகலாகாது

19. அடகுபிடிப்பவரெவரும் ஏலவிற்பனையாளர் தொழிலைக் கொண்டு நடாத்துதலாகாது.

அடகுபிடிப்பவரினால் காண்பிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள்

20. அடகுபிடிப்பவர் ஒவ்வொருவரும்-

(அ) அவரது கடையின் அல்லது தொழிலிடத்தின் வெளிக்கதவின்மீது வாசிக்கத்தக்க எழுத்துக்களில், தொழிலின் பெயரை, உரிமத்தின் பதிவிலக்கத்தை மற்றும் **"அடகுபிடிப்பவர்"** என்ற சொல்லைத் தமிழிலும், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய இடத்துக்கு வருகின்ற ஒவ்வோராளுக்கும் தெளிவாகத் தென்படக்கூடியவகையிலும் வாசிக்கத்தக்கவகையிலும், இந்நியதிச்சட்டத்துக்கான **அட்டவணை- II** இல் தரப்பட்டுள்ள விபரங்களைக் கொண்டுள்ள தமிழிலும், சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமான அறிவித்தலை அவரது தொழிலிடத்தில் துலாம்பரமானவோர் இடத்தில் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்.

அடகுபிடிப்போரினால் வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகம், படிவம் அல்லது ஆவணம்.

21. (1) ஏதேனும் புத்தகத்தில், படிவத்தில் அல்லது ஆவணத்தில் எவையேனும் விபரங்கள் பதியப்பட வேண்டுமென இந்நியதிச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய விபரங்கள் தமிழ் அல்லது சிங்கள மொழியில் பதியப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வோர் அடகுபிடிப்பவரும் இந்நியதிச்சட்டத்துக்கான **அட்டவணை- I** இல் தரப்பட்டுள்ளவாறு பொருளளவில் **படிவம் "ஆ"** இலுள்ள அடைவுப்பொருள் புத்தகத்தையும் பொருளளவில் **படிவம் "இ"** இலுள்ள அடைவுப்பொருள் விற்பனைப் புத்தகத்தையும் பேணுதல் வேண்டுமென்பதுடன், இயைபான எல்லா விபரங்களையும் பதிதலும் வேண்டும்.

(3) மாகாண ஆணையாளருக்கு அவற்றைச் சமர்ப்பிக்கும்படி அடகுபிடிப்பவர் தேவைப்படுத்தப்படின் அவ்வாறு செய்வது அவரது கடமையாதல் வேண்டும்.

அடகுப் பற்றுச்சீட்டு

22. (1) சகல அடகு சீட்டுக்களிலும் இங்கு **1 ஆம் அட்டவணையில் (ஈ)** படிவத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விதத்திலான மூலப்பிரதியும், உபபிரதியுடனும் அப்படிவத்திற்கமைய வேண்டிய நியதிகளுக்கு ஏற்ப எழுதி கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) **அட்டவணை II** இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல விபரங்களும், இந்நியதிச்சட்டத்துக்கான **அட்டவணை - I** இல் தரப்பட்டுள்ளவாறு சகல சீட்டுக்களில் முதல் பிரதியில் மறுபுறத்தில் சிங்கள, தமிழ், ஆங்கில மும்மொழிகளிலும் வாசிக்கக்கூடிய விதத்தில் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) அடைவுப்பொருளொன்று அடகு வைக்கும் பொழுது அவ் அடமானத்திற்குரிய அடகுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தின் பெறுமதிக்கு முத்திரை ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்.அம்முத்திரைக்கான செலவுகள் அடகுபிடிப்பவரினால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

பின்வரும் நடவடிக்கைகள் இடம்பெறாவிட்டால் அல்லது இடம்பெறும் வரை எந்த ஒரு பொருளும் அடகுப் பொருளாக கருதப்படமாட்டாது.

(4)(அ) பொருள் அடகு வைப்பவர் அடகுச் சீட்டின் அடியிதழில் கையொப்பமிடுதல்

(ஆ) பொருள் அடகுபிடிப்பவரினால் அடகுச் சீட்டின் மூல இதழில் கையொப்பமிட்டு அதனை, பொருள் அடகு வைப்பவருக்கு வழங்குதல்;

(இ) பொருள் அடகுவைப்பவரினால் அடகுச் சீட்டின் மூல இதழை அடகுபிடிப்பவரிடமிருந்து பெற்றுக்கொண்டு அதனை அவர் ஏற்றுக்கொள்ளல்;

(ஈ) வருடாந்த வட்டியை அடகுச் சீட்டில் குறிப்பிடல்.

23. அடகுபிடிப்பவரெவரும், இந்நியதிச்சட்டத்துக்கான **அட்டவணை – II** இல் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை விஞ்சுகின்ற வட்டியை விதிப்பனவு செய்தலாகாது: வட்டி

ஆயின், ஓர் அடைவுப்பொருள்மீது கொடுக்கப்பட்ட கடன் தொடர்பில் தொழில் மொத்தவிற்பனை வரவு வரி செலுத்தப்படற்பாலதாகவிருக்குமிடத்து, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டதெதுவும், அடகுவைப்பவரிடமிருந்து அத்தகைய வரியை அறவிடுவதிலிருந்து அடகுபிடிப்போரைத் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

பாகம் IV

**அடைவுப் பொருட்கள்**

24. ஒவ்வோர் அடைவுப்பொருளும், அடகுவைத்த நாளிலிருந்து, அந்நாள் நீங்கலாக, (இதனகத்துப்பின்னர் **"மீட்புக் காலப்பகுதி"** எனக் குறிப்பீடு செய்யப்படும்) பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் மீட்கப்படற்பாலதாதல் வேண்டும். மீட்புக் காலப்குதி.

25. இந்நியதிச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இந்நியதிச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அடைவுப்பொருள் ஒவ்வொன்றும் கையுதிர்க்கப்படும் வரை, மீட்புக் காலப்பகுதி முடிவுற்றிருந்தபோதிலும், தொடர்ந்தும் மீட்கப்படற்பாலதாதல் வேண்டும். விற்பனை செய்யப் படும் வரை அடைவுப் பொருட்கள் மீட்கப்படற்பாலன வாகத் தொடர்ந் திருத்தல்.

26. (1) அடகுவைப்பவர், அடைவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழை அடகு பிடிப்பவருக்கு ஒப்படைத்து அத்தகைய இதழை அடகுப்பிடிப்பவரின் அல்லது அவரது முகவரின் அல்லது சேவையாளரின் சமூகத்தில் கையொப்பமிட்டால், அடகுவைப்பவர் ஓர் அடைவுப்பொருளை மீட்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஓர் அடைவுப்பொருளை மீட்பதற்கான நடவடிக்கைமுறை

(2) அடகுவைப்பவரல்லாத ஆளொருவர், உரியமுறையிலான அதிகாரம் அல்லது தத்துவமளித்தலுடன் அடைவுப்பொருள் தொடர்பான அடகுப்பற்றுச்சீட்டின் மூல இதழை, அடகுவைப்பவரின் கையொப்பத்தை முறையாகப் புறக்குறிப்பிட்டு அத்தகைய ஆள் அடகுபிடிப்பவருக்கு ஒப்படைத்தால் மற்றும் அத்தகைய ஆள் அடகுபிடிப்பவரின் அல்லது அவரது முகவரின் அல்லது சேவையாளரின் சமூகத்தில் அத்தகைய இதழைக் கையொப்பமிட்டால், அடகுவைப்பவர் தவிர்ந்த ஆளொருவர் அவ்அடைவுப் பொருளை மீட்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) அடகுவைப்பவரின் இறப்பு அல்லது இயலாமை காரணமாக, அடைவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பவர், அவ் அடைவுப் பொருளை மீட்பதற்கு உரித்துடையவரென உரிமைகோரி ஆனால் அடகு வைப்பவரினால் முறையாகப் புறக்குறிப்பிடப்பட்டுக் கையொப்பமிடப்பட்ட அடகுப்பற்றுச்சீட்டின் மூல இதழை அடகுபிடிப்பவருக்கு ஒப்படைக்க இயலாதுள்ளவிடத்து, அடகுபிடிப்பவர், அடகுப் பற்றுச்சீட்டின் அத்தகைய மூல இதழை வைத்திருப்பவர், அவ்அடைவுப்பொருள் தொடர்பான அடகுப்பற்றுச்சீட்டின் சொல்லப்பட்ட மூல இதழை, அத்தகைய வைத்திருப்பவரினாலும் அவரை அடையாளங்காணும் ஆளினாலும் சமாதான நீதவான் அல்லது சத்திய ஆணையாளரொருவர் முன்னர் முறையாகக் கையொப்பமிடப்பட்டதும் பொருளளவில் **அட்டவணை – I** இல் தரப்பட்டுள்ள **படிவம் "உ"** இலுள்ளதுமான ஒரு வெளிப்படுத்துகையுடன் சேர்த்து அவருக்கு ஒப்படைத்தால், அவ் அடைவுப்பொருள் மீட்கப்படுவதற்கு அனுமதியளித்தல் வேண்டும்.

(4) உட்பிரிவுகள் (1), (2), (3) என்பவற்றுக்கமைய, அடகுபிடிப்பவர், கடனையும் அத்தகைய கடன்தொடர்பில் செலுத்தப்படற்பாலதான அதன்மீது உரிய வட்டியையும், தொழில் மொத்தவிற்பனைவரவு வரி ஏதேனுமிருப்பின் அதனையும் கொடுப்பனவு செய்வதன்மேல், அடகுவைப்பவருக்கு அல்லது

அடைவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டை வைத்திருப்பவருக்கு அடைவுப்பொருளை ஒப்படைத்தல் வேண்டுமென்பதுடன், அடகுபிடிப்பவர், அவ் அடைவுப்பொருளை அவ்வாறு ஒப்படைத்தமை தொடர்பில் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கவும்படுகின்றார்: ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வைத்திருப்பவர், அடகுப்பற்றுச்சீட்டின் மூல இதழின் உடைமையைச் சட்டவிரோதமாகப் பெற்றுள்ளாரெனச் சந்தேகிப்பதற்கு அடகுபிடிப்பவருக்குக் காரணமிருப்பின், அடகுபிடிப்பவர் அத்தகைய ஆளையும் பற்றுச்சீட்டையும் உடனடியாகக் கைப்பற்றித் தடுத்துவைத்தல் வேண்டுமென்பதுடன், அவரையும் அதனையும் காவல்துறை அலுவலரிடம் அல்லது கிராம அலுவலரிடம் உடனடியாகக் கையளித்தலும் வேண்டும்.

*அடைவுபபொருளின் பெறுமதி குறைக்கச் செய்ததற்கான நட்டஈடு*

27. அடகுபிடிப்பவரின் தவறுகை, அசட்டை அல்லது வேண்டுமென்ற துர்நடத்தை மூலம் அல்லது அதனூடாக, அடைவுப்பொருள், அது அடகுவைக்கப்பட்ட நேரத்தில் கொண்டிருந்த பெறுமதிக்குக் குறைவான பெறுமதியை உடையதாக வந்துள்ளது அல்லது ஆக்கப்பட்டுள்ளது என அடைவுப்பொருளை மீட்பதற்கு உரித்துள்ளவரும் முனைகின்றவருமான ஆளொருவர் நியாயாதிக்கங்கொண்டுள்ள குடியியல் நீதிமன்றமொன்றின் திருப்திக்குக் காண்பித்தால், நீதிமன்றம், அது தகுதியானதெனக் கருதினால்,அடைவுப்பொருளின் சொந்தக்காரரினது திருப்திக்கு நியாயமான நட்டஈட்டை அளித்தல் வேண்டுமென்பதுடன், நட்டஈட்டுத்தொகை, அடகுபிடிப் பவருக்குச் செலுத்தப்படற்பாலதான தொகையிலிருந்து கழிக்கப்படுதலும் வேண்டும். அல்லது நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அடகுபிடிப்பவரினால் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*பற்றுச்சீட்டில்லாத சொந்தக்காரர் களுக்கும் அடகு வைப்பவருக்குமான பாதுகாப்பு.*

28. (1) ஓர் அடைவுப்பொருளின் சொந்தக்காரராகவுள்ளாரென உரிமைகோருகின்ற, ஆனால் அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திராத எவரேனுமாள், அல்லது அடகுப்பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பதற்கு உரித்துடையவராகவுள்ளாரென உரிமைகோருகின்ற, ஆனால் அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழ் காணாமற் போயுள்ளது, களவாடப்பட்டுள்ளது, தவறவிடப்பட்டுள்ளது, அழிக்கப்பட்டுள்ளது அல்லது அவரிடமிருந்து மோசடியான முறையில் பெறப்பட்டுள்ளது எனச் சார்த்துகின்ற எவரேனுமாள், அவரினாலும் சாட்சியாக அவரை அடையாளங் காண்கின்ற ஆளினாலும் சமாதான நீதவான் ஒருவர் முன்னர் முறையாகச் செய்யப்பட்டதும்,பொருளளவில் **அட்டவணை – I** இல் தரப்பட்டுள்ள **படிவம் "உ"** இலுள்ளதுமான வெளிப்படுத்துகையொன்றை அடகுபிடிப்பவருக்குக் கொடுத்துதவலாம் என்பதுடன், அதன்மேல், அவர் அடகுப்பற்றுச்சீட்டின் மூல இதழைக் காண்பித்தார் என்றாற்போன்று, அவருக்கும் அடகுபிடிப்பவருக்குமிடையே அதே எல்லா உரிமைகளையும் பரிகாரங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்:

ஆயின், ஓர் அடைவுப்பொருளை மீட்கும் நோக்கத்துக்காக, அவர், பிரிவு 26 இனால் தேவைப்படுத்தப் பட்டவாறு அதற்கான அடகுப்பற்றுச்சீட்டின் மூல இதழையல்லாது அடகுப்பற்றுச்சீட்டின் அடியிதழைக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) அடகுபிடிப்பவர், முக்கியமான ஏதேனும் விபரத்தில் வெளிப்படுத்துகை மோசடியானது அல்லது பொய்யானது என உள்ளபடியான அல்லது ஆக்கச்சார்பு அறிவித்தல் அவருக்கிருந்தாலொழிய, அடைவுப்பொருளை ஒப்படைப்பதற்காக அல்லது வெளிப்படுத்துகையுடன் இசைந்தொழுக வேறு வகையில் செயலாற்றுவதற்காக அவருக்கு இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படுகின்றது.

*அடைவுப்பொருள் மீட்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட பின்னர் அடகு பிடிப்பவரினால் அடகுப் பற்றுச் சீட்டு வைத்திருக் கப்படுதல்*

29. (1) ஓர் அடைவுப் பொருளை மீட்கும் நோக்கத்துக்காக அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழ் அடகு பிடிப்பவருக்கு ஒப்படைக்கப்படுமிடத்து, அடகு பிடிப்பவர், அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழையும் அடகுப்பற்றுச்சீட்டின் அடியிதழையும் அவ்வடகுப்பொருள் மீட்கப்பட்ட திகதியிலிருந்து கணிக்கப்பட்ட இரண்டாண்டு காலப்பகுதிக்குத் தனதுடைமையில் வைத்திருத்தல் வேண்டும்.

(2) அடைவுப்பொருளொன்று தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் இதழ் ஒப்படைக்கப்படாமல் அடைவுப் பொருள் மீட்கப்படுமிடத்து, அடகுபிடிப்பவர், அவ்வடைவுப்பொருள் மீட்கப்பட்ட திகதியிலிருந்து கணிக்கப்பட்ட இரண்டாண்டு காலப்பகுதிக்கு அடைவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் அடியிதழையும் அத்தகைய மீட்பு நோக்கத்துக்காக பிரிவு 28(1) இன்கீழ் அவருக்குக் கொடுத்து உதவப்பட்ட வெளிப்படுத்துகையையும் தனது உடைமையில் வைத்திருத்தல் வேண்டும்.

(3) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அடைவுப்பொருளொன்று விற்பனைசெய்யப்படுமிடத்து, அடகுபிடிப்பவர், விற்பனைத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கு அடைவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் அடியிதழைத் தனதுடைமையில் வைத்திருத்தல் வேண்டும்.

30. (1) எவையேனும் சூழ்நிலைகளில் ஏதேனும் அடைவுப்பொருள் அடகுபிடிப்பவரிடம் அடகு வைக்கப் பட்டிருக்கையில் காணாமற் போகுமிடத்து, அத்தகைய அடைவுப் பொருளின் தற்போதைய சந்தைப் பெறுமதி, அடகுவைப்பவருக்கு அல்லது அத்தகைய அடைவுப்பொருளை மீட்பதற்கு உரித்துடைய வேறெவரேனுமாளுக்குச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும். அத்தகைய அடகுபிடிப்பவரினால் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பு, நட்டஈட்டைக் கொடுப்பனவு செய்வதற்கு விதித்துரைக்கப்பட்ட முறையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். — அடகுபிடிப் போரினால் கொடுத்துதவப்பட்ட பிணைபொறுப்பைப் பயன்படுத்துதலும் திருப்பிக் கொடுத்தலும்.

(2) ஆளொருவர் அடகுபிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடத்தாதொழியுமிடத்து, அவரினால் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பின் தொகை, உட்பிரிவு 1 இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய நட்டஈட்டைக் கொடுப்பனவு செய்வதற்கு அதிலிருந்து பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையைக் கழித்து, அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

31. (1) தீ, இயற்கைப் பேரழிவு அல்லது வேறேதேனும் விளைவினால் அல்லது அதன் காரணமாக, அல்லது வேறேதேனும் விளைவு காரணமாக அடைவுப்பொருள் அழிக்கப்படுமிடத்து அல்லது சேதமடையுமிடத்து, அடகுபிடிப்பவர், கடன் மற்றும் வட்டித்தொகையையும் அத்தகைய கடன்தொடர்பில் செலுத்தப்படற் பாலதான மொத்தவிற்பனை வரி ஏதேனுமிருப்பின் அதனையும் கழித்த பின்னர், அடைவுப்பொருளின் பெறுமதியைச் செலுத்துவதற்கு மீட்புக் காலப்பகுதியின்போது கோரிக்கையின்மீது பொறுப்பாதல் வேண்டும். — தீ, இயற்கைப் பேரழிவு அல்லது வேறேதேனும் விளைவின் விடயத்தில் அடகுபிடிப்பவரின் பொறுப்பு.

(2) அடகுபிடிப்பவர் ஒவ்வொருவரும், அவரிடம் அடகு வைக்கப்பட்ட பொருட்களின் பெறுமதியினது முழு அளவுக்கும் தமது தொழிலைக் காப்புறுதி செய்து வைத்தல் வேண்டும்.

(3) ஒவ்வோர் அடகுபிடிப்பவரும், அடகுவைக்கப்பட்ட பொருட்களைக் காப்பான முறையில் களஞ்சியப் படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

32. அடகுபிடிப்பவர் ஒவ்வொருவரும்,அடைவுப்பொருளை மீட்கும் நேரத்தில், அவருக்குச் செலுத்தப்பட்ட கடன் மற்றும் வட்டித்தொகைக்காகவும் அவரினால் அறவிடப்பட்ட வரிகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்காகவும் பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன், அடைவுப்பொருட் புத்தகத்துடன் அத்தகைய பற்றுச்சீட்டின் பிரதியைப் பேணிக்காத்தலும் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு, பொருளளவில் இந்நியதிச்சட்டத்துக்கான **அட்டவணை - I** இல் தரப்பட்டுள்ள **படிவம் "எ"** இலிருத்தல் வேண்டும். — அடகு பிடிப்பவரின் பற்றுச்சீட்டு.

33. (1) மீட்புக்காலப்பகுதியினுள் மீட்கப்படாத ஒவ்வோர் அடைவுப் பொருளும், பகிரங்க ஏலவிற்பனை மூலம் கையுதிர்க்கப்படலாம், ஆனால் வேறுவகையில் கையுதிர்க்கப்படுதலாகாது; அத்துடன் இந்நியதிச் சட்டத்துக்கான **அட்டவணை - III** இலுள்ள ஒழுங்குவிதிகள், விற்பனை தொடர்பாகக் கடைப்பிடிக்கப் படுதல் வேண்டும். — அடைவுப் பொருட்கள் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படுதல்.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அடைவுப் பொருளொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளவிடத்து, அத்தகைய அடைவுப்பொருள் எந்த அடகுபிடிப்பவரிடம் அடகுவைக்கப்பட்டுள்ளதோ அந்த அடகுபிடிப்பவர், அத்தகைய விற்பனைக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் அத்துடன் அத்தகைய விற்பனை நடைபெறவுள்ள இடம் பற்றி மாகாண ஆணையாளருக்கு எழுத்தில் குறைந்தபட்சம் அறுபது நாட்களைக் கொண்ட எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும். மாகாண ஆணையாளர், தமது முடிபை அத்தகைய விற்பனைக்கு இருபத்தொரு நாட்களுக்கு முன்னர் அடகுபிடிப்பவருக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) அடகுபிடிப்பவரின் அடைவுப்பொருள் இந்நியதிச்சட்டத்தின்கீழ் விற்பனை செய்யப்படவுள்ளவிடத்து, அத்திகதியும் நேரமும் இடமும் பற்றி அடைவுப் பொருளின் விற்பனைக்குப் பதினான்கு நாட்களுக்கு முன்னர் அடகுவைப்பவருக்குப் பதிவஞ்சல் மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

34. (1) விற்பனைத் திகதியன்று வருமதியான கடன் மற்றும் வட்டித்தொகைக்கும் அத்தகைய கடன்தொடர்பில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரிக்கும் மேலானவொரு பணத்தொகைக்காக அடைவுப் பொருளொன்று இந்நியதிச்சட்டத்தின்கீழ் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு விடயத்திலும், அடகுபிடிப்பவர் - — கடன், வட்டி மற்றும் மொத்தவிற்பனை வரியின் தொகைக்கு மேலான அடைவுப்பொருளின் விற்பனையிலான நடவடிக்கைமுறை

(அ) அத்தகைய அடைவுப்பொருள், அவ்வடைவுப்பொருள் எத்தொகைக்கு விற்பனை செய்யப்பட்டதோ அத்தொகை மற்றும் விற்பனையின் அவசியமான செலவுத்தொகைகளையும் விதிப்பனவுகளையும் கழித்தபின்னர் அடகுவைத்தவரின் வரவுக்கிருக்கும் தொகை என்பவற்றை அடகுவைத்தவருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய விற்பனைத் திகதியிலிருந்து ஓராண்டினுள் செய்யப்பட்ட கோரிக்கையின்மேல், அடகுவைத்தவரின் வரவுக்கிருக்கும் தொகையை அவ்வடைவுப்பொருள் தொடர்பான அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பவருக்குச் செலுத்துதல் வேண்டும்;

(இ) அத்தகைய விற்பனைத் திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியினுள் அத்தகைய கோரிக்கையெதுவும் செய்யப்படாவிடின்,அத்தகைய காலப்பகுதி முடிவுற்றதன்மேல் உடனடியாக, அடகுவைத்தவரின் வரவுக்கிருக்கும் அத்தகைய பணத்தொகையை மாகாண ஆணையாளருக்குப் பொறுப்பித்தல் வேண்டும்.

(2) மாகாண ஆணையாளருக்குப் பணம் பொறுப்பிக்கப்பட்டபின்னர் உடனடியாக அடகுவைத்தவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) விற்பனைத் திகதியிலிருந்து இரண்டாண்டு காலப்பகுதியினுள் அடகுவைத்தவர் மாகாண ஆணையாளருக்குக் கோரிக்கை செய்யுமிடத்து, மாகாண ஆணையாளர், அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பவருக்கு முப்பது நாட்களைக் கொண்ட காலப்பகுதியினுள் அத்தகைய தொகையைச் செலுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(4) உட் பிரிவு 3 இன்கீழான அத்தகைய கோரிக்கையெதுவும் இரண்டாண்டு காலப்பகுதியினுள் செய்யப்படாத விடத்து, அத்தகைய பணத்தொகை வடமாகாண சபை நிதியத்துக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

(5) விற்பனைத் திகதியிலிருந்து இரண்டாண்டு காலப்பகுதி முடிவுறுவதன்மேல் கோரிக்கையெதுவும் ஏற்றுக் கவனிக்கப்படுதலாகாது.

அடகுபிடிப்பவரினால் அடைவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுதல்.

35. அடகுபிடிப்பவர் இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நடாத்தப்பட்ட அல்லது நடாத்தப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏலவிற்பனையில், அவரிடம் அடகு வைக்கப்பட்ட அடைவுப் பொருளுக்காக விலைகூறி அதனைக் கொள்வனவு செய்யலாமென்பதுடன், அத்தகைய கொள்வனவின்மீது, கொள்வனவு செய்யப்பட்ட அத்தகைய அடைவுப்பொருளின் தனிச் சொந்தக்காரராக அவர் கருதப்படுதலும் வேண்டும்.

## பாகம் V

## சோதனையும், பரிசோதனையும், கைப்பற்றுகையும்

தொழிலைச் சோதனையிடுதல்.

36. மாகாண ஆணையாளர் அல்லது பிரதி மாகாண ஆணையாளர் அல்லது மாகாண ஆணையாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட மதிப்பீட்டாளர், அடகுபிடிப்பவரினது தொழிலின் கணக்குகளைச் சோதனையிடுவதற்கு அதிகாரங்கொண்டிருத்தல் வேண்டும்.

விற்பனைப் புத்தகத்தைச் சோதனையிடுவ -தற்கான தத்துவம்.

37. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அடைவுப்பொருளொன்று விற்பனை செய்யப்பட்ட திகதியிலிருந்து இரண்டாண்டுகளினுள் எந்நேரத்திலும், அடகுப்பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பவர், அடகு பிடிப்பவரின் புத்தகத்திலுள்ள அல்லது ஏலவிற்பனையாளரினால் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட ஏலவிற்பனை பற்றிய தகவலைக் கொண்டுள்ள பட்டியலிலுள்ள விற்பனைப் பதிவுகளைச் சோதனையிடலாம். அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழை வைத்திருப்பவரை, அத்தகைய புத்தகத்திலுள்ள அல்லது பட்டியலிலுள்ள விற்பனை பற்றிய பதிவுகளைச் சோதனைசெய்வதற்கு அடகுபிடிப்பவர் அனுமதித்தல் வேண்டும்.

அடகுக்குப் பொருட்களை முனைகின்ற ஆட்கள் தம்மைப் பற்றி சரியான விபரங்களைக் கொடுக்காதவிடத்து எடுக்கப்படும் நடவடிக்கைகள்.

38. (அ) அடகு என்றவகையாகப் பொருளொன்றை அடகுபிடிப்பவரொருவருக்கு முனைகின்ற எவரேனுமாள், தேசிய அடையாள அட்டையை, கடவுச்சீட்டை அல்லது சாரதி உரிமத்தைக் காண்பிக்க மறுக்குமிடத்து அல்லது இயலாதவராகவுள்ளவிடத்து;

(ஆ) அடகு என்றவகையாகப் பொருளொன்றை அடகுபிடிப்பவரொருவருக்கு முனைகின்ற எவரேனுமாள், அவர் அதனை உடைமைகொண்ட வழிவகைகள் பற்றித் திருப்திகரமான விபரமொன்றை வழங்க மறுக்குமிடத்து அல்லது இயலாதவராகவுள்ளவிடத்து;

(இ) எவரேனும் ஆளினால் அடகுபிடிப்பவருக்கு அடகாக முனையப்பட்ட பொருளொன்று அவருக்குச் சொந்தமான ஆதனமா அல்லதா என்பது பற்றி, அல்லது அவரது பெயரும் முகவரியும் பற்றி, அல்லது பொருளின் சொந்தக்காரரினது பெயரும் முகவரியும் பற்றி அடகுபிடிப்பவருக்கு வேண்டுமென்று பொய்யான தகவலை அத்தகைய ஆள் கொடுக்குமிடத்து;

(ஈ) அடைவுப்பொருளை மீட்பதற்கு உரித்துடையவராகவிராமல் ஓர் அடகுப்பொருளை மீட்பதற்கு எவரேனுமாள் எத்தனிக்கின்றவிடத்தும் முயற்சிக்கின்றவிடத்தும்; அல்லது

(உ) பொருளொன்றை அடகுபிடிப்பவருக்கு அடகு என்றவகையாக எவரேனுமாள் முனைகின்றவிடத்தும் அது களவாடப்பட்டது அல்லது வேறுவகையில் சட்டவிரோதமாகப் பெறப்பட்டுள்ளது எனச் சந்தேகிப்பதற்கு அடகுபிடிப்பவருக்குக் காரணமுள்ளவிடத்தும். அடகுபிடிப்பவர் அந்த ஆளையும் பொருளையும் கைப்பற்றித் தடுத்துவைக்கலாமென்பதுடன், அவரையும்அதனையும் இயன்றளவு விரைவாக ஒரு காவல்துறை அலுவலரின் அல்லது கிராம அலுவலரின் கட்டுக்காப்பினுள் ஒப்படைக்கலாம்; அவர் உடனடியாக அவ்வாளை நீதிவான் நீதிமன்றமொன்றின்முன்னர் நிறுத்துதலும் அப்பொருளைக் காண்பித்தலும் வேண்டும்.

39. (1) மாகாணஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் தொகுதி, நாளின் எந்நேரத்திலும் எவரேனும் அடகுபிடிப்பவரின் கடையினுள் அல்லது தொழிலிடத்தினுள் அல்லது வதிவிடத்தினுள் பிரவேசித்து, அடகுபிடிப்பவரிடம் அடைவுவைக்கப்பட்ட ஏதேனும் பொருளை அல்லது அவரினால் பேணப்பட்ட எவையேனும் புத்தகங்களையும் ஆவணங்களையும் பரிசோதனைசெய்து அவை பற்றி அவசியமான குறிப்புகளை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும். காவல் துறையினரின் உதவி அவசியமானதென மாகாண ஆணையாளர் அபிப்பிராயப்படின், அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருடன் அல்லது அலுவலர்களுடன் சேர்ந்து காவல்துறை அலுவலர் ஒருவர் செல்லலாம்.

*அடகுபிடிப்பவரின் கடையை அல்லது வதிவிடத்தைத் தேடுகையிடுவதற்-கான தத்துவம்.*

(2) அத்தகைய எவரேனும் அலுவலர் அல்லது அத்தகைய அலுவலர்கள் தொகுதி அத்தகைய கடமைகளை நிறைவேற்றுகையில் ஆளெவரும் அவர்களை எதிர்த்தலாகாது.

## பாகம் VI

## தவறுகளும் தண்டங்களும்

40. (அ) அடகு என்ற வகையாகப் பொருளொன்றை அடகுபிடிப்பவருக்கு முனைகின்றவரும், ஆனால் அத்தகைய பொருளை அவர் எந்த வழிவகைகள் மூலம் உடைமைகொண்டாரென்பது பற்றித் திருப்திகரமான விபரத்தைக் கொடுப்பதற்கு மறுக்கின்றவரும் அல்லது இயலாதவரும்;

*அடகுவைப் போரினாலும் ஏனைய ஆட்களினாலும் புரியப் படும் தவறுகள்.*

(ஆ) அடகுபிடிப்பவருக்கு அடகாக அவர் முனைந்த பொருள் தமது சொந்த ஆதனமா அல்லதா என்பது பற்றியும் அவரது பெயர் பற்றியும், அல்லது அத்தகைய பொருளின் சொந்தக்காரரினது பெயரும் முகவரியும் பற்றியும் அடகுபிடிப்பவருக்கு வேண்டுமென்று பொய்யான தகவலைக் கொடுக்கின்றவரும்;

(இ) சட்டமுறையான சாக்கின்றி, இன்னோராளின் பொருளாகவுள்ள எதனையும் அடகுபிடிப்பவரிடம் அடகுவைக்கின்றவரும்;

(ஈ) அடைவுப்பொருளொன்றை மீட்பதற்கு உரித்துடையவரான ஆளாகவிராமல் அத்தகைய அடைவுப்பொருளை மீட்பதற்கு எத்தனிக்கின்றவரானவரும்அல்லது முயற்சிக்கின்றவரானவரும்;

(உ) இந்நியதிச்சட்டத்தின்கீழான வெளிப்படுத்துகை முக்கியமான எவையேனும் விபரங்களில் பொய்யானதென அறிந்துகொண்டு அத்தகைய வெளிப்படுத்துகையை ஒன்றில் தமக்காக அல்லது இன்னோராளை அடையாளங் காண்பதில் செய்கின்றவரும்; அல்லது

(ஊ) இந்நியதிச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை மீறுகின்றவரும் அல்லது இந்நியதிச்சட்டத்தினால் அவர் எதனைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றாரோ அதனைச் செய்யத் தவறுகின்றவரும், ஆன ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

41. (அ) பதினெட்டு வயதுக்குக் குறைந்தவராக அல்லது மதுபோதையில் இருப்பவராகக் காணப்படுகின்ற எவரேனுமாளிடமிருந்து பொருளொன்றை அடகாக ஏற்றுக்கொள்கின்றவரான;

*அடகுபிடிப் போரினாலான தவறுகள்*

(ஆ) அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழைக் கொடுக்காமல் பொருளொன்றை அடகாக ஏற்றுக் கொள்கின்றவரான;

(இ) இன்னோர் அடகுபிடிப்பவரினால் வழங்கப்பட்ட அடகுப் பற்றுச்சீட்டின் மூல இதழைக் கொள்வனவு செய்கின்றவரான அல்லது அடகாக அல்லது பரிமாற்றாக எடுக்கின்றவரான;

(ஈ) பொருளொன்றை அடகாக ஏற்றுக்கொள்வதற்குப் பதினெட்டு வயதுக்குக் குறைந்த எவரேனும் சேவையாளரைத் தொழிலுக்கமர்த்துகின்றவரான;

(உ) இந்நியதிச்சட்டத்தின் கீழான பகிரங்க ஏலவிற்பனையிலல்லாது, அவரிடம் அடகிலுள்ளபோது ஏதேனும் அடைவுப்பொருளைக் கொள்வனவு செய்கின்றவரான;

(ஊ) ஏதேனும் அடைவுப்பொருள் அவரிடம் அடகிலிருக்கையில், அதனைக் கொள்வனவு செய்யும் நோக்குடன் அதனை மீட்பதற்கு முனைகின்றவரான;

(எ) ஏதேனும் பொருளை அடகுவைக்கின்ற அல்லது அடகுவைக்க முனைகின்ற எவரேனுமாளுடன், மீட்புக் காலப்பகுதியினுள் அத்தகைய பொருளைக் கொள்வனவு செய்வதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு உடன்படுகின்றவரான;

(ஏ) இந்நியதிச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றவாறான அத்தகைய நேரத்திலும் அத்தகைய முறையிலும் தவிர, அவரிடம் அடகுவைக்கப்பட்ட ஏதேனும் அடைவுப்பொருளை விற்பனை செய்கின்றவரான அல்லது வேறுவகையில் கையுதிர்க்கின்றவரான;

(ஐ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் அவரினால் வைத்திருக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் புத்தகத்தில் ஏதேனும் பொய்யான பதிவைச் செய்கின்றவரான அல்லது இந்நியதிச்சட்டத்தினால் அதன்கண் செய்வதற்கு அவர் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் பதிவைச் செய்வதற்குத் தவறுகின்றவரான;

(ஒ) நியாயமான அல்லது நியாயப்படுத்தத்தக்க ஏதேனும் காரணமின்றி இந்நியதிச்சட்டத்தின் 26 ஆம், 37 ஆம் பிரிவுகளின் கீழ் எவரேனுமாளைக் கைப்பற்றித் தடுத்துவைக்கின்றவரான;

(ஓ) அவரிடம் அடகுவைக்கப்பட்ட எல்லாப் பொருட்களினதும் பெறுமதியின் முழு அளவுக்குத் தமது தொழிலைக் காப்புறுதி செய்து வைப்பதற்குத் தவறுகின்றவரான;

(ஔ) இந்நியதிச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்றவரான அல்லது இந்நியதிச்சட்டத்தினால் செய்வதற்கு அவர் தேவைப்படுத்தப்பட்ட எதனையும் செய்வதற்குத் தவறுகின்றவரான;

(க) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மாகாண ஆணையாளருக்கு வருடாந்தக் கணக்குகள் பற்றிய கூற்றை அளிப்பதற்குத் தவறுகின்றவரான, அடகுபிடிப்பவர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*ஏதேனும் துணி, உடுதுணிகள், செய்து முடிக்காத பண்டங்கள் முதலியவற்றை அடகாக எடுத்தல்.*

**42.** (1) கழுவுவதற்கு, சுத்திகரிப்பதற்கு, அழுத்துவதற்கு, சீர்ப்படுத்துவதற்கு, உற்பத்தி செய்வதற்கு, செப்பனிடுவதற்கு, செய்து முடிப்பதற்கு அல்லது அலங்கரிப்பதற்கு எவரேனுமாளுக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏதேனும் துணியை அல்லது உடைகளை அல்லது செய்துமுடிக்காத பண்டங்களை அல்லது பொருட்களை அறிந்துகொண்டு ஏற்றுக்கொள்கின்ற ஒவ்வோர் அடகுபிடிப்பவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழான தவறொன்றுக்கு ஏதேனும் நீதிமன்றம் எவரேனும் அடகுபிடிப்பவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்குமிடத்து, நீதிமன்றம், அத்தவறுக்காக அத்தகைய நீதிமன்றம் விதிக்கக்கூடிய வேறேதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, நீதிமன்றத்தின் முன்னிலையில் அல்லது நீதிமன்றம் பணிக்கின்றவாறான வேறேதேனும் முறையில் அடைவுப்பொருளின் சொந்தக்காரருக்கு அதனை மீட்டளிக்கும்படி அடகுபிடிப்பவருக்குக் கட்டளையிடலாம்.

*அடகுபிடிப் போரினால் புரியப்பட்ட தவறுகள்.*

**43.** முப்பத்தினான்காம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஓர் அடகுவைப்பவரின் வரவுக்கிருக்கும் தொகையை மாகாண ஆணையாளரிடம் வைப்பிலிடுவதற்குத் தவறுகின்ற அடகுபிடிப்பவர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தவறுக்காக ஏதேனும் நீதிமன்றம் எவரேனும் அடகுபிடிப்பவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்குமிடத்து, நீதிமன்றம், அத்தவறுக்காக அது விதிக்கக் கூடிய வேறேதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட

குற்றப்பணமென்றாற்போன்று அத்தகைய தொகைக்குச் சமமானவொரு பணத்தொகையை அடகு பிடிப்பவரிடமிருந்து அறவிடும்படி கட்டளையிடலாம். அத்தகைய ஒவ்வொரு பணத்தொகையும் நீதிமன்றத்தினால் அறவிடப்படும்போது, வடமாகாண சபை நிதியத்தில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

44. அடகுபிடிப்பவர் என்ற தொழிலின்போது அல்லது அத்தொழில் தொடர்பாக அடகுபிடிப்பவரின் சேவையாளரினால் அல்லது முகவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எதுவும், விடயத்துக்கேற்ப, அடகுபிடிப்பவரினால் செய்யப்பட்டதாக அல்லது செய்யாதுவிடப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்: அடகுபிடிப்பவரின் சேவையாளரினாலான அல்லது முகவரினாலான தவறுகள்.

ஆயின், எவ்வாறாயினும், அடகுபிடிப்பவர் கடையில் அல்லது தொழிலிடத்தில் இல்லாதிருக்கையில் இந்நியதிச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாக அடகுபிடிப்பவரின் சேவையாளரினால் அல்லது முகவரினால் எதுவும் செய்யப்படுமிடத்து, அத்தகைய சேவையாளர் அல்லது முகவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

45. (1) இந்நியதிச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொவ்வொருவரும் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். தண்டம்.

(2) இவ்வுட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட குற்றப்பணம், வடமாகாண சபை நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

46. அடகுபிடிப்பவரொருவர் பொருளொன்றைச் சட்டவிரோதமாக உடைமைகொண்டுள்ளாரென இந்நியதிச்சட்டத்தின்கீழ் கோப்பிடப்பட்ட ஏதேனும் வழக்குநடவடிக்கையில் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்படும் போதெல்லாம், நீதிமன்றம் முறையானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகள் எவையேனுமிருப்பின் அவற்றின்கீழ் அப்பொருள் காண்பிக்கப்படுவதற்கும் அத்தகைய நீதிமன்றத்தினால் பெயகர்ஷகுறிப்பிடப்பட்ட எவரேனுமாளுக்கு அது ஒப்படைக்கப்படுவதற்கும் கட்டளையிடுவது அத்தகைய நீதிமன்றத்துக்குத் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும். அடகுபிடிப்பவரினால் சட்ட விரோதமாக உடைமை கொள்ளப்பட்ட பொருட்கள்.

பாகம் VII

## பொது ஏற்பாடுகள்

47. (1) அடகுபிடிப்பவர் தொழில், தனியாளொருவரினாற் கொண்டுநடாத்தப்படுமிடத்து, அவர் இறப்பதன் மேல், அத்தொழில், 4 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பதிவின்மீது இந்நியதிச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளுக்கு மாற்றளிக்கப்படுதல் வேண்டும். பெயர்நியமனம்.

(2) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆள் அடகுபிடிப்பவருக்கு முன்னர் இறக்குமிடத்தும் அத்தகைய அடகுபிடிப்பவரினால் ஆளெவரும் பெயர்குறித்து நியமிக்கப்பட்டிராதவிடத்தும், அத்தகைய அடகுபிடிப்பவர் இறப்பதன்மேல், மாகாண ஆணையாளர், அத்தகைய அடகுபிடிப்பவரின் தொழிலை ஒழித்துக்கட்டுவதற்கு ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(3) (அ) ஏதேனும் இயலாமை அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அடகுபிடிப்பவர் தமது தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு இயலாதவராகவுள்ளவிடத்து, அத்தகைய அடகுபிடிப்பவர் தனதிடத்தில் ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கலாம். அத்தகைய பெயர் நியமனம், இந்நியதிச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமையச் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) மாகாண ஆணையாளர் அத்தகைய ஆளைப் பதிவுசெய்யலாமென்பதுடன், தொழிலானது அத்தகைய பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளுக்கு மாற்றளிக்கப்படுதலும் வேண்டும்.

(4) உட்பிரிவு (2) அல்லது (3) இன்கீழ் அடகுபிடிப்பவர் தொழில் மாற்றளிக்கப்படுமிடத்து, மாகாண ஆணையாளர் திருப்திப்படுவதன்மேல், சொத்துக்களும் பொறுப்புக்களும் எந்த ஆளுக்கு மாற்றளிக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆளுக்கு உரிமமொன்றை வழங்குதல் வேண்டும்.

(5) அடகுபிடிப்பவர் தொழில், பங்காண்மை மூலம் கொண்டு நடாத்தப்படவுள்ளவிடத்து, அத்தகைய தொழிலை ஒழித்துக் கட்டும்போது, அடகுவைப்போரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அத்தகைய ஏற்பாடுகளைப் பங்காண்மை உடன்படிக்கை கொண்டிருத்தல் வேண்டும்.

அடகுபிடிப்பவர் தொழிலை மாற்றளித்தல்.

48. (1) எவரேனும் அடகுபிடிப்பவர், அவரது அடகுபிடிப்பவர் தொழிலை மாற்றளிப்பதற்கு உட்கருதுமிடத்து, அத்தகைய அடகுபிடிப்பவர் பின்வருவனவற்றுடன் சேர்த்து மாகாண ஆணையாளருக்கு எழுத்திலான கோரிக்கையைச் செய்தல் வேண்டும்:-

(அ) அவருக்கெதிராக முறைப்பாடுகள் எவையுமில்லையென்ற பயன்பட, தொழிலிடம் அமைந்துள்ள இடத்திலுள்ள காவல் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடமிருந்தும் அடகுபிடிப்பவர் வதிகின்ற இடத்திலுள்ள காவல்நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடமிருந்தும் பெறப்பட்ட சான்றிதழ்கள்;

(ஆ) அவருக்கெதிராக முறைப்பாடுகள் எவையுமில்லையென்று பயன்பட, (இதனகத்துப்பின்னர் “மாற்றளிக்கப்பட்டவர்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய தொழில் மாற்றளிக்கப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஆள் வதிகின்ற இடத்திலுள்ள காவல்நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்;

(இ) அடகுபிடிப்பவருக்கும் மாற்றளிக்கப்பட்டவருக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு நடவடிக்கையெதுவுமில்லையென்ற பயன்பட்ட சத்தியக்கடதாசி; அத்துடன்

(ஈ) மீட்கப்படவுள்ள எல்லா அடைவுப்பொருட்களும் தொடர்பிலான எல்லாத் தகவல்களும் அவசியமான வேறேதேனும் தகவலும்.

(2) உட்பிரிவின் 1 இன் கீழ் கோரிக்கையைச் செய்துள்ள அடகுபிடிப்பவர், அத்தகைய கோரிக்கைத் திகதியிலிருந்து எவையேனும் பொருட்களை அடகாக ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(3) உட்பிரிவின் 1 இன் கீழ் செய்யப்பட்ட கோரிக்கையின்மேல், அத்தகைய அடகுபிடிப்பவர், ஒருவார காலப்பகுதியினுள், தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலான நாளாந்தச் செய்தித்தாள்களில் மாற்றளிக்கப்பட்டவரின் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றைக் கொண்டுள்ள அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல், தொழிலிடத்தின் துலாம்பரமானவொரு பாகத்தில் ஒட்டப்படுதல் வேண்டும்.

(5) மாகாண ஆணையாளர் திருப்திப்படுவதன் மேல், மாற்றளிக்கப்பட்டவருக்கு உரிமமொன்றை வழங்குதல் வேண்டும்.

அடகுபிடிப்பவர் தொழிலை ஒழித்துக்கட்டுதல்.

49. (1) எவரேனும் அடகுபிடிப்பவர் தமது அடகுபிடிப்பவர் தொழிலை ஒழித்துக்கட்டுவதற்கு உட்கருது மிடத்து, அத்தகைய அடகுபிடிப்பவர் பின்வருவனவற்றுடன் சேர்த்து அவரது உட்கருத்தை மாகாண ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்:-

(அ) அவருக்கெதிராக நிதிசார்ந்த முறைப்பாடுகள் எவையுமில்லையென்று பயன்பட, தொழிலிடம் அமைந்துள்ள இடத்திலுள்ள காவல் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடமிருந்தும் அடகுபிடிப்பவர் வதிகின்ற இடத்திலுள்ள காவல் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடமிருந்தும் பெறப்பட்ட சான்றிதழ்கள்;

(ஆ) அவருக்கெதிராக நீதிமன்றத்தில் நிதிசார் குற்றவியல் வழக்கு நடவடிக்கையெதுவுமில்லையென்ற பயன்பட்ட சத்தியக்கடதாசி; அத்துடன்

(இ) மீட்கப்படவுள்ள எல்லா அடைவுப்பொருட்களும் தொடர்பிலான எல்லாத் தகவல்களும் அவசியமான வேறேதேனும் தகவலும்.

(2) உட்பிரிவு 1 இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட அடகுபிடிப்பவர் அத்தகைய திகதியிலிருந்து எவையேனும் பொருட்களை அடகாக ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(3) உட்பிரிவு 1 இன் கீழ் அறிவிக்கப்பட்ட தொடர்பாடலின்மீது அத்தகைய அடகுபிடிப்பவர் ஒருவார காலப்பகுதியினுள், தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலான நாளாந்தச் செய்தித்தாள்களில் அவரது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் அடகுபிடிப்பவரின் உரிம இலக்கம் அத்துடன் அடகுபிடிப்பவர் தொழிலை ஒழித்துக்கட்டுவதற்கான உட்கருத்து என்பவற்றைக் கொண்டுள்ள அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(4) உட்பிரிவு 3 இல் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல், தொழிலிடத்தின் துலாம்பரமானவொரு பாகத்தில் ஒட்டப்படுதல் வேண்டும்.

(5) மாகாண ஆணையாளர், எந்த அலுவலரின் மேற்பார்வையின்கீழ் அத்தகைய ஒழித்துக்கட்டுகை இடம்பெறவேண்டுமோ அந்த அலுவலரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

50. இந்நியதிச்சட்டத்தின் நியதிகளின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் பிணைப்பொறுப்பாக வைப்பொன்றைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்படுகின்ற எவரேனும் அடகுபிடிப்பவர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அவ்வாறு செய்வதற்குத் தவறுமிடத்து, அத்தகைய தொகை,இந்நியதிச்சட்டத்தின்கீழ் அத்தகைய அடகுபிடிப்பவர் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள கொடுப்பனவிலான செலுத்தத் தவறுகையாகக் கருதப்படுதல் வேண்டும். கொடுப்பனவிலான செலுத்தத் தவறுகை.

51. (1) இந்நியதிச்சட்டத்தின்கீழ் அடகுபிடிப்பவர் எந்தப் பணத்தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ளாரோ அந்த ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவில் செலுத்தத்தவறுமிடத்து, மாகாண ஆணையாளர், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் செலுத்தத் தவறுகையிலுள்ள ஏதேனும் பணத்தொகையை அறவிடுவதற்கான வழக்கு நடவடிக்கைகளை எடுக்குமுன்னர், பொருளளவில் இந்நியதிச்சட்டத்துக்கான அட்டவணை IV இல் தரப்பட்டுள்ள படிவம் "ஆ" வில் உள்ள தேவைப்பட்ட விபரங்களுடன் சேர்த்து, பொருளளவில் இந்நியதிச்சட்டத்துக்கான அட்டவணை IV இல் தரப்பட்டுள்ள படிவம் "அ" வில் உள்ள அறிவித்தலை வழங்குதல் வேண்டும். செலுத்தத் தவறுகையிலுள்ள அடகு பிடிப்பவருக்கான அறிவித்தல்.

(2) இந்நியதிச்சட்டத்தின்கீழ் அவர் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ள அடகுபிடிப்பவர், உட்பிரிவு 1 இன் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய பணத்தொகையின் கொடுப்பனவுக்கெதிராக ஆட்சேபனை தெரிவிக்கலாமென்பதுடன், மாகாண ஆணையாளர் அத்தகைய ஆட்சேபனையைக் கவனத்திற்கொண்டு இறுதியானதாகவிருக்கவேண்டிய அதன்மீதான அவரது முடிபைக் கொடுத்தலும் வேண்டும்:

ஆயின், சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு நியாயமான காரணத்துக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழான செலுத்தத் தவறியவர் அறிவித்தல் வழங்கப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள் ஆட்சேபனை தெரிவிப்பதிலிருந்து தடுக்கப்பட்டாரென மாகாண ஆணையாளர் திருப்திப்படுமிடத்து, அத்தகைய ஆட்சேபனையை முன்வைப்பதற்கான காலநீடிப் பொன்றை அவர் வழங்குதல் வேண்டும்.

(3) (அ) உட்பிரிவு 2 இன் கீழான அறிவித்தலிலிருந்து அல்லது இறுதி முடிபு செய்யப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்கள் கழிந்ததன் மேல், இந்நியதிச்சட்டத்தின்கீழ் அத்தகைய அடகுபிடிப்பவர் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவில் அவர் செலுத்தத்தவறுமிடத்து, மாகாண ஆணையாளர், பொருளளவில் இந்நியதிச்சட்டத்துக்கான அட்டவணை IV இல் தரப்பட்டுள்ள படிவம் "இ" வில் உள்ள சான்றிதழை, அடகு பிடிப்பவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியுடனும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விபரங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியுடனும் சேர்த்து, செலுத்தத்தவறியுள்ள அடகுபிடிப்பவரின் தொழிலிடம் எந்தப் பிரிவில் அமைந்துள்ளதோ அல்லது அடகுபிடிப்பவர் எந்தப் பிரிவில் வதிகின்றாரோ அந்தப்பிரிவில் நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவானுக்கு வழங்குதல் வேண்டும்.

(ஆ) நீதிவான் அதன்மேல், இந்நியதிச்சட்டத்தின்கீழ் வருமதியான பணத்தொகையை அறவிடுவதற்கு அவருக்கெதிராக மேலதிக வழக்கு நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படுதலாகாது எனக் காரணங்காட்டும்படி அத்தகைய அடகுபிடிப்பவரைத் தம்முன்னர் கட்டளைவிட்டழைத்தல் வேண்டுமென்பதுடன், போதிய காரணம் காட்டப்படாவிடின் அத்தகைய பணத்தொகை மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்காக அத்தகைய அடகுபிடிப்பவர்மீது நீதிவானின் தண்டனைத்தீர்ப்பினால் விதிக்கப்பட்ட குற்றப்பண மொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகையவொரு தவறுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பணக் கொடுப்பனவின் தவணை தவறுகை தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம்பிரிவின் ஏற்பாடுகள்

(அதன் (1) ஆம் உட்பிரிவின் பந்திகள் (அ), (ஈ) மற்றும் (ஐ) என்பனதவிர) அதன் மீது ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான், அத்தகைய தண்டனைத்தீர்ப்பை விதித்த நேரத்தில் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளின் மூலம் அவர் விடுத்திருக்கக்கூடிய ஏதேனும் பணிப்பையும் விடுக்கலாம்.

(4) (அ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் அடகுபிடிப்பவர் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஏதேனும் பணத் தொகையின் கொடுப்பனவில் அவர் செலுத்தத்தவறுமிடத்தும் இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தத்தவறுகையிலுள்ள தொகையை அறவிடுவது செயல்முறைக்குகந்ததல்ல என மாகாண ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்தும் அல்லது வருமதியான முழுத்தொகையும் அறவிடப்பட்டிராதவிடத்தும், அப்போது அவர், பொருளளவில் இந்நியதிச்சட்டத்துக்கான அட்டவணை IV இல் தரப்பட்டுள்ள படிவம் "இ" இல் உள்ள சான்றிதழை, அடகுபிடிப்பவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியுடனும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விபரங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியுடனும் சேர்த்து, செலுத்தத் தவறுகின்ற அடகுபிடிப்பவர் எந்த மாவட்டத்தில் வதிகின்றாரோ அல்லது அத்தகைய அடகுபிடிப்பவரின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனம் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தில் நியாயாதிக்கங் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்துக்கு வழங்கலாம்.

(ஆ) மாவட்ட நீதிமன்றம் அதன்மேல், அவ்வாறு வருமதியான தொகையை அறவிடுவதற்கு அவசியமெனப் பிசுக்கால் கருதக்கூடியவாறாகத் செலுத்தத் தவறுகின்ற அடகுபிடிப்பவரின் எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களையும் அல்லது அவற்றின் அத்தகைய பாகத்தையும் கைப்பற்றி விற்பனை செய்வதற்கு அவருக்கு அதிகாரமளித்து அவரைத் தேவைப்படுத்துகின்ற நிறைவேற்றெழுத்தாணையை அவருக்கு வழங்கும்படி பணித்தல் வேண்டுமென்பதுடன், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 226 ஆம், 297 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய கைப்பற்றுகைக்கும் விற்பனைக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் அடகுபிடிப்பவருக்கு வழங்கப்பட்ட அறிவித்தலிலான ஏதேனும் கூற்றின் அல்லது விபரங்களிலான ஏதேனும் பதிவின் அல்லது இப்பிரிவின் நோக்கத்துக்காக (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின்கீழ் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் விபரங்களிலான ஏதேனும் பதிவின் சரியானதன்மை, இப்பிரிவின்கீழான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் நீதிமன்றத்தினால் கேள்விக்குட்படுத்தப்படுதலோ அல்லது விசாரணை செய்யப்படுதலோ ஆகாது என்பதுடன், அதற்கிணங்க, இப்பிரிவிலுள்ளதெதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அடகுபிடிப்பவருக்கு வழங்கப்பட்ட அறிவித்தலிலான ஏதேனும் கூற்றின் அல்லது விபரங்களிலான ஏதேனும் பதிவின் அல்லது (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின்கீழ் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் விபரங்களிலான ஏதேனும் பதிவின் சரியானதன்மையை நீதிமன்றம் கவனத்திற் கொள்வதற்கு அல்லது முடிபுசெய்வதற்கு அதிகாரமளித்தலுமாகாது; அத்துடன் அது தவணை தவறுகின்ற அடகுபிடிப்பவரிடமிருந்து இந்நியதிச்சட்டத்தின்கீழ் வருமதியான தொகை முறையாகக் கணக்கிடப்பட்டுள்ளது மற்றும் தவணை தவறியதாகவுள்ளது என்பதற்குப் போதிய சான்றாதலும் வேண்டும்.

(6) மூன்றாம் அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் விடயத்துக்கேற்ப, கட்டளை அல்லது பணிப்பொன்று எந்த அடகுபிடிப்பவருக்கெதிராக வழங்கப்பட்டுள்ளதோ அந்த அடகுபிடிப்பவர் அத்தகைய கட்டளைக்கு அல்லது பணிப்புக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறியுள்ளவிடத்து, அத்தகைய அடகுபிடிப்பவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க முறையான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(7) (68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், இந்நியதிச்சட்டத்தின்கீழ் பிணைப்பொறுப்பாகச் செலுத்தப்படற்பாலனவான எவையேனும்பணத்தொகைகளை அறவிடுவதற்கு ஏற்புடையனவாதலாகாது.

(8) இப்பிரிவில் "அடகுபிடிப்பவர்" என்பது, ஒரு கம்பெனியின் அல்லது ஆட்கள் குழுவின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது பிரதான அலுவலர், அல்லது பங்காண்மையின் பங்காளர் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவின் உறுப்பினர் அல்லது பதவிதாங்குநர் என்போரை உள்ளடக்குகின்றது.

52. (1) இந்நியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காக, மாகாண ஆணையாளர், எழுத்திலான அறிவித்தல்மூலம், பின்வருமாறு செய்யும்படி எவரேனும் அடகுபிடிப்பவரை அல்லது முகவரைத் தேவைப்படுத்தலாம்:- மாகாண ஆணையாளர் தகவலைத் தேவைப்படுத்தலாம்.

(அ) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் குறித்துரைக்கப்பட்ட புத்தகங்களை, கணக்குகளை, வியாபார நிரல்களை, கையிருப்பு நிரல்களை, இடாப்புகளை, உறுதிச்சீட்டுகளை, காசோலைப் புத்தகங்களை, அடகுப் பற்றுச்சீட்டுகளை, அடைவுப் பொருள் புத்தகங்களை, கணக்காய்வறிக்கைகளை அல்லது அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட வேறெவையேனும் ஆவணங்களைக் காண்பிக்கும்படியும்;

(ஆ) அடகுபிடிப்பவர் தொழில் தொடர்பான ஏதேனும் தகவலை வழங்கும்படியும்;

(இ) ஏதேனும் கருமத்தை அல்லது எவையேனும் கருமங்களைப் புலனாய்வு செய்வதற்கு அறிவித்தலிற் குறிப்பிடப்பட்ட நேரத்திலும், திகதியிலும், இடத்திலும் தாமாகச் சமுகமளிக்கும்படியும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படும்படியும்.

(2) உட்பிரிவு 1 இன் கீழ் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி எவரேனுமாளுக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுமிடத்து, அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் அடகுபிடிப்பவரின் அல்லது முகவரின் கடமையாதல் வேண்டும்.

(3) மாகாண ஆணையாளர் இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, குறித்தவொரு காலப்பகுதிக்கு அத்தகைய புத்தகங்களை, கணக்குகளை, வியாபார நிரல்களை, கையிருப்பு நிரல்களை, இடாப்புகளை, உறுதிச்சீட்டுகளை, காசோலைப் புத்தகங்களை, அடகுப் பற்றுச்சீட்டுகளை, அடைவுப்பொருள் புத்தகங்களை, கணக்காய்வறிக்கைகளை அல்லது வேறு ஆவணங்களை அவரது கட்டுக்காப்பினுள் எடுப்பதற்கு அதிகாரமுடையவராகவிருக்கலாம்.

53. இந்நியதிச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்கான குற்றவழக்கெதுவும், மாகாண ஆணையாளரினால் அல்லது எழுத்திலான அவரது வலுவளிப்புடன் தவிர, தொடுக்கப்படுதலாகாது. குற்றவழக்குத் தொடுப்பு.

54. (1) அடகுபிடிப்பவர் ஒவ்வொருவரும் அல்லது அடகுபிடிப்பவர் தொழிலிலுள்ள அவரது முகவர் அல்லது அலுவலர் மற்றும் அவரது பதவி அல்லது உத்தியோகம் காரணமாக அத்தகைய தொழிலின் பதிவேடுகள், இடாப்புகள், கடிதத்தொடர்பு அல்லது வேறேதேனும் விடயத்துக்கு ஏதேனும் அணுக்கத்தையுடைய ஆள் ஒவ்வொருவரும், அடகுவைப்பவரின் நலன்கருதி அதன் உள்ளீடுகள் தொடர்பாக முழுமையாக இரகசியம் பேணுதல் வேண்டும். இரகசியம் பேணுதல்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு ஆள் ஒவ்வொருவரும், பின்வரும் சூழ்நிலைகளில் அன்றி, அத்தகைய தொழில் தொடர்பான எத்தகையதுமான தகவலை எவரேனும் தனியாளுக்கு, கூட்டுத்தாபனத்துக்கு, வங்கிக்கு, நீதிமன்றத்துக்கு, நிறுவனத்துக்கு, உருவகத்துக்கு, திணைக்களத்துக்கு, அலுவலருக்கு, முகவருக்கு, இலங்கை அரசாங்கத்தின் அல்லது வேறேதேனும் அரசாங்கத்தின் பிரதிநிதிக்கு அல்லது வேறெவரேனும் சட்ட அல்லது இயற்கை ஆளுக்கு அல்லது நீதிமுறை அதிகாரிக்குக் கொடுத்தலோ, வெளியிடுதலோ அல்லது வெளிப்படுத்துதலோ ஆகாது:-

(அ) அத்தகைய தொழிலின் அடகுபிடிப்பவர் அல்லது அத்தகைய பொருளை அடகுவைத்தவர் அவ்வாறு செய்வதற்குத் தமது அனுமதியை அளித்தாலன்றியும்;

(ஆ) அத்தகைய அடகுபிடிப்பவரினால் அல்லது அவருக்கெதிராக, அல்லது அடகுவைத்தவரினால் அல்லது அவருக்கெதிராகச் சட்ட வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டாலன்றியும்;

(இ) அவ்வாறு செய்யும்படி ஏதேனும் சட்ட ஏற்பாட்டினால் அவர் தேவைப்படுத்தப்பட்டாலன்றியும்.

பாகம் VIII

**ஒழுங்குவிதிகளை உருவாக்குதல்**

ஒழுங்குவிதிகள்.

55. (1) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம்;

(ஆ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் சமர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிக்கையில் உள்ளடக்கப்படவேண்டிய தகவல்;

(இ) மாகாணஆணையாளரினால் வைத்திருக்கப்பட்டு பேணப்படவேண்டிய புத்தகங்களும் இடாப்புகளும் அவற்றின்கண் பதியப்படவேண்டிய விபரங்களும்;

(ஈ) அடகுபிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான பதிவுக்கட்டணங்கள்; அத்துடன்

(உ) உரிமம் பெறுநரினால் கொடுத்துதவப்பட வேண்டிய கட்டணங்களும் பிணைப்பொறுப்பு வைப்பும், பிணைப்பொறுப்புக் கட்டணங்களை வைப்பிலிடுவதற்கான முறையும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் எல்லாம் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும், அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதங்களினுள் வடமாகாண சபையினால் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்.

(4) வடமாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எத்திகதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படவேண்டுமோ அத்திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

அடகுபிடிப்பவர் தொழிலைக் கொண்டு நடாத்துபவராகக் கருதப்படுதல்.

56. இந்நியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காக, பண்டங்களைக் கொள்வனவுசெய்து அல்லது பெற்றுக்கொண்டு அல்லது ஏற்றுக்கொண்டு, வெளிப்படையான அல்லது உட்கிடையானவோர் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் பணத்தொகையை அதன்மீது செலுத்துகின்ற அல்லது முற்பணமாகக் கொடுக்கின்ற அல்லது கடனாகக்கொடுக்கின்ற, அல்லது கொடுக்கல்வாங்கலின் தன்மையிலிருந்தும் இயல்பிலிருந்தும் அப்பண்டங்கள் எவையேனும் நிபந்தனைகளின்மீது மீட்கப்படலாம் அல்லது கொள்வனவு செய்யப்படலாம் என நியாயமான முறையில் ஊகிக்கப்படுகின்ற, அல்லது பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்காக அல்லது விற்பனைசெய்வதற்காக அல்லது அவற்றின்மீது முற்பணமாகக் கொடுக்கப்பட்ட பணத்துக்கான பிணைப்பொறுப்பு என்றவகையில் பண்டங்களை ஏற்றுக்கொள்கின்ற எவரேனுமாள் அடகுத்தொழிலைக் கொண்டு நடாத்துபவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், மேலும், அத்தகைய ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும், பொருளும், கொடுப்பனவும், முற்பணமும், கடனும், இந்நியதிச்சட்டத்தின் பொருளுக்குட்பட அடகுவைத்தல், அடைவு வைத்தல் மற்றும் கடன் ஒன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

பேணல்கள்

57. இத்தாற் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) 2017 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, வடமாகாண அடகுபிடிப்போர் நியதிச்சட்டம் ஆக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், இந்நியதிச்சட்டம் தொடங்கும் திகதியன்று வலுவிலுள்ளவாறான 99 ஆம் அத்தியாயமான அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அத்தகைய ஒழுங்குவிதி இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒழுங்குவிதி இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் திருத்தப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது மாற்றப்படலாம்;

(ஆ) இந்நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முற்போந்த நாளன்று வடமாகாணத்தினுள் 99 ஆம் அத்தியாயமான அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்தின் 3ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும், நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து இந்நியதிச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) இந்நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முற்போந்த நாளன்று வடமாகாணத்தினுள் 99 ஆம் அத்தியாயமான அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்தின் 23அ என்னும் பிரிவின்கீழ் அடகு பிடிப்பவரொருவரினால் கொடுத்துதவப்பட்ட எல்லாப் பிணைப்பொறுப்பும், நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து இந்நியதிச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் கொடுத்துதவப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) வடமாகாணத்தினுள் 99 ஆம் அத்தியாயமான) அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அடகுபிடிப்பவரினால் அல்லது அவருக்கெதிராகக் தொடுக்கப்பட்டவையும் இந்நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும், நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் விடயத்துக்கேற்ப, அடகுபிடிப்பவரினால் அல்லது அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்குநடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(உ) இந்நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முற்போந்த நாளன்று வடமாகாணத்தினுள் (99 ஆம் அத்தியாயமான) அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்தின் கீழ் அடகுபிடிப்பவரின் எல்லாப் பொறுப்புகளும், இந்நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து அத்தகைய அடகு பிடிப்பவரின் பொறுப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IX

58. இந்நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய- பொருள்கோடல்.

“**தொழிலிடம்**” என்பது, தொழிற்செயற்பாடுகள் நிறைவேற்றப்படும் வீடு, களஞ்சிய மனை, கடை, கம்பெனி, கூட்டுத்தொழில், பங்காண்மைத்தொழில் மற்றும் இடம் எதனையும் அத்துடன் அத்தகைய கிளைகள் பேணப்படுகின்ற இடங்களுள் எவற்றையும் உள்ளடக்குகின்றது;

“**மீளாய்வு சபை**” என்பது,உரிமமொன்றை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுக்கின்ற முடிவினால் அல்லது வழங்கப்பட்ட உரிமமொன்றை இடைநிறுத்தியமை தொடர்பாக செய்யப்படும் மேன்முறையீட்டினை மீளாய்வு செய்வதற்கு அமைச்சரால் நியமிக்கப்படும் சபை.

“**பிரதம செயலாளர்**” என்பது,வடமாகாணத்தின் பிரதம செயலாளர் என்று பொருளாகும்;

“**வெளிநாட்டுக் கம்பெனி**” என்பது, இலங்கையினுள் தொழிலிடமொன்றைத் தாபித்துள்ளதும், இலங்கையினுள் தாபிக்கப்பட்ட தொழிலிடத்தைத் தொடர்ந்து வைத்திருக்கின்றதும், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதுமான ஏதேனும் கம்பெனி அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

“**வெளிநாட்டு வர்த்தக நிறுவனம் ஒன்று**” என்பது,

1) பங்குதாரர்களில் இருவரை கொண்ட வர்த்தகம் ஒன்றாகும் பொழுது, அவர்களுள் ஒரு பங்குதாரர் அல்லது இரண்டு பங்குதாரர்களும் இலங்கை பிரசை அல்லாதவர் : அல்லதுபங்குதாரர்கள் இருவருக்கு மேற்பட்ட தொகையினரைக்கொண்ட வர்த்தகமாகும்போது அவர்களுள் ஆகக் குறைந்தபட்சம் ஒரு பங்காளர் இலங்கைப் பிரசை அல்லாதவரான வர்த்தகமொன்று என்று பொருள்படும்.

“**அடகுவைப்பவர்**” என்பது, அடகுக்காக அடகுபிடிப்பவரொருவருக்குப் பொருளொன்றை ஒப்படைக்கின்ற ஆள் என்று பொருளாகும்;

**"அடைவுப்பொருள்"** என்பது, அடகுபிடிப்பவரிடம் அடகுவைக்கப்பட்ட ஒரு பொருள் என்று பொருளாகும்;

"வடமாகாணத்தின் மாகாண ஆணையாளர்" என்பது, 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வடமாகாணத்தின் நிதிநியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட மாகாண ஆணையாளர் என்று பொருளாகும்;

**"நிதியாண்டு"** என்பது, சகலவருடங்களிலும் ஏப்பிறல் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பித்து அண்மிக்கும் வருடத்தின் மார்ச்சு மாதம் 31 ஆந் திகதி முடிவுறும் கால எல்லை என்றுபொருள்படும்.

"**மாகாண சபை நிதியம்**" என்பது, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாணசபைகள் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வடமாகாணத்தின் மாகாண நிதியம் என்று பொருளாகும்;

"**மாகாணப் பிரதி ஆணையாளர்**" என்பது, 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வடமாகாணத்தின் நிதி நியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட மாகாணப் பிரதி ஆணையாளர் என்று பொருளாகும்;

"**அமைச்சர்**" என்பது, வடமாகாணத்தின் எந்த அமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப் பட்டுள்ளதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்;

"**ஆள்**" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்குகின்றது;

"**சொத்துப் பரிபாலகர்**" என்பது, இறந்துபோன ஒருவருடைய சொத்துப் பரிபாலகர் ஒருவர் அல்லது உரிமைத்துவம் உடையவர்.

(அ) ஒருவர் என்ற பொருள்படுவதுடன், அதன் கீழ் குறிப்பிடப்படும் ஆட்கள் உட்படுவர். இறந்தவர் ஒருவருடைய சொத்துக்களின் உரிமைகளை பொறுப்பேற்கும் என்பது, சொத்துக்களைப் பரிபாலிக்கும் ஒரு நபர்; அல்லது

(ஆ) இறந்து போனவருடைய சொத்து தொடர்பாக உயில் சாசனத்தின் உண்மை நிரூபிக்கப்பட்ட உரிமைத்துவ அதிகாரப்பத்திரங்கள் வழங்கும்படி அல்லது மீண்டும் முத்திரையிடுவதற்கு அல்லது மாவட்ட நீதிமன்றத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட அவ்வாறு கேட்பதற்கு உரிமைகளையுடைய நபரொருவர் என்று; அல்லது

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளரின் இறுதி விருப்பப்பத்திரங்களுக்குக் கீழ் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்புக் கொடுத்தல்களுக்கும் கீழ் செயற்படும் பொறுப்பாளியுடையோர் என்று பொருள்படும்.

"**மாகாணசபை**" என்பது, வடமாகாணத்தின் மாகாணசபை என்று பொருளாகும்;

**"இலங்கைப் பிரசை"** என்பது, பிறப்பின் மூலம் அல்லது நிலவுகின்ற சட்டத்தின்மூலம் இலங்கைப் பிரசையாக வருகின்ற எவரேனும் தனியாள் என்று பொருளாகும்;

"**செய்துமுடிக்கப்படாத பண்டங்கள்**" என்பது, ஒன்றில் கலக்கப்பட்ட அல்லது தனிவேறான ஏதேனும் உற்பத்தியை அல்லது உற்பத்தியின் கிளையைச் சேர்ந்த எவையேனும் பண்டங்கள் அல்லது பொருட்கள் உற்பத்தி நிலையினுள் இடப்பட்டபின்னரும், அவை அணியப்படும் அல்லது நுகரப்படும் நோக்கத்துக்காகப் பூர்த்திசெய்யப்படுவதற்கு முன்னரும் அல்லது செய்துமுடிக்கப்படுவதற்குமுன்னரும் எவையேனும் பண்டங்களைக் கூட்டுச்சேர்ப்பதற்கு அல்லது உற்பத்திசெய்வதற்கு உட்கருதப்பட்ட எத்தகையனவுமான பொருட்களையும் உள்ளடக்குகின்றது.

ஒவ்வாமையின் விடயத்தில் தமிழ் உரை மேலோங்கி நிற்றல்.

59. இந்நியதிச்சட்டத்தின் தமிழ் சிங்கள அல்லது ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(பிரிவு 6)

## அட்டவணை – I

படிவம் - "அ"

### உரிமம்

**இலக்கம் ..................................**

வட மாகாணத்தின் மாகாண ஆணையாளர் ஆகிய நான், ................................... என்னும் முகவரியில் அடகுபிடிப்போர் தொழிலை நிறைவேற்றுவதற்கு .................................. என்னுமிடத்தைச் சேர்ந்த .................................. என்பவருக்கு 2017 ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க, வடமாகாணத்தின் அடகுபிடிப்போர் நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமமொன்றை இத்தால் வழங்குகின்றேன்.

உரிமத்தின் செல்லுபடியானதன்மை .................................. அன்று முடிவுறும்.

திகதி: ..................................

..................................
மாகாண ஆணையாளர்
(இறப்பர் முத்திரை)

படிவம் - "ஆ"

### அடைவுப்பொருள் புத்தகம்

.......................... என்பவரின் அடைவுப்பொருள் புத்தகம் ............................. என்னுமிடத்தைச் சேர்ந்த அடகுபிடிப்பவர்.

| அடகுப் பற்றுச்சீட்டுக்களின் இலக்கமும் அவற்றை வழங்கிய திகதியும் | மாத்தில் அடைவுப்பொருளின் இலக்கம் | ஒவ்வொரு பொருளின் மீதுமான கடன்தொகை | இலாபம் அல்லது ஒவ்வொரு பொருளின்மீதும் விதிப்பனவு செய்யப்பட்ட வட்டி | அடகுவைப்பவரின் பெயர் | அடகுவைப்பவரின் முகவரிகள் | அடகுவைப்பவர் சொந்தக்காரராக இராதிருப்பின் சொந்தக்காரரின் பெயர் | அடகுவைக்கப்பட்ட உவ்வொரு பொருளினதும் விவரணம் | பொருளின் அல்லது நகையின் எடை அடகுவைக்கப் பட்ட ஒவ்வொரு பொருளினதும் விவரணம் | பொருளின் அல்லது நகையின் எடை | அடகுவைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளினதும் பெறுமதி | மீட்புத் திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. | | | | | | | | |

(பிரிவு 21)

படிவம் - " இ "

**அடைவுப்பொருட்களின் விற்பனைப் புத்தகம்**

....................................................
....................................................
என்பவரின் அடைவுப்பொருள் புத்தகம்

................................................
................................................
என்னுமிடத்தைச் சேர்ந்த
அடகுபிடிப்பவர்

விற்பனைத் திகதியும் இடமும் ..................................................
..................................................
................................

ஏலவிற்பனையாளரின் பெயரும் முகவரியும் ................................................
................................................
................................

| அடைவுப் பொருள் புத்தகத்திலுள்ள வாறு அடைவுப் பொருளின் இலக்கம் | அடகு வைத்த திகதி | அடகு வைத்தவரின் பெயர் | கடன் தொகை | வருமதியான வட்டித் - தொகை | அடைவுப் பொருள் ஏல விற்பனை யாளரினால் எத்தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது. | கொள்வன வாளரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | |

அடியிதழ் இல.
(அடகுபிடிப்பவரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்)
திகதி :

அடகுபிடிப்பவரின் பெயரும் முகவரியும்
.............................................................
..........................................................

படிவம் - " ஈ "
அடகுப் பற்றுச்சீட்டு

மூல இதழ் இல.
.................................................... திகதி
.................................................... என்பவர்,
(அடகுவைப்பவரின் பெயரும் முகவரியும்)
இந்நாளன்று .......................... ரூபாப்
பெறுமதியான ............................... ஐ
.......................... ரூபாவுக்காக கீழே
கையொப்பமிட்டுள்ளவரிடம்(அடகுபிடிப்பவரின்
பெயரும் முகவரியும்) அடகு வைத்துள்ளார்.

..........................................................
..................................................

....................................................
.................................................................
.................................... என்னுமிடத்தைச் சேர்ந்தவரும்
(அடகு வைப்பவரின் முகவரி)
........................... ஆம் இலக்க அடையாள
அட்டையை வைத்திருப்பவரும் கீழே
கையொப்பமிட்டுள்ளவருமான .............................
ஆகிய நான்,
................................. என்ற மேற்கூறப்பட்ட
அடகுபிடிப்பவரிடம் .............. ரூபாப் பெறுமதியான
........................................ ஐ ...................................
................................................. ரூபாவுக்காக
இந்நாளன்று அடகுவைத்துள்ளேன்.

கையொப்பம்
(இறப்பர் முத்திரை)

(அடகுபிடிப்பவரின் அல்லது அடகுபிடிப்பவரின்
சேவையாளரின் அல்லது முகவரின்
கையொப்பம்)

பெயர் .....................................................
.....................................................................
கையொப்பம் .......................................
(கையொப்பமிட இயலாதிருப்பின் இடது
பெருவிரலடையாளம்)

(பிரவு 26)

படிவம் - " உ "

**அடகுப் பற்றுச்சீட்டின் இதழ்மீது அடகுவைப்பவரின் கையொப்பம் புறக்குறிப்பிடப்படாமல்**
**24 ஆம் பிரிவின்கீழ் அது ஒப்படைக்கப்படுமிடத்து செய்யப்படும் வெளிப்படுத்துகை**

............................................... என்னுமிடத்தைச் சேர்ந்தவரும் ....................................... ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை/ கடவுச்சீட்டை வைத்திருப்பவருமான .................................... ஆகிய நான் (அ/ஆ), அடகுபிடிப்போர் நியதிச்சட்டத்தைப் பின்பற்றி, அடகுபிடிப்பவரான ............................................... என்பவரின் கடையில் ........................................... என்பவர் கீழே விவரிக்கப்பட்ட பொருளை/பொருட்களை அடைவு வைத்து அதற்கான பற்றுச்சீட்டின் இதழைப் பெற்றாரென்றும், அடைவுப் பொருளை மீட்கும் நோக்கத்துக்காக, சொல்லப்பட்ட ................................ என்பவர் (அடகுவைத்தவர்) இறந்துள்ளமை காரணமாக/ஒரு சட்ட இயலாமைக்குட்பட்டுள்ளமை காரணமாக, அதாவது, .............................. (சட்ட இயலாமையின் தன்மை), சொல்லப்பட்ட (அடகுவைத்தவரின்) கையொப்பம் அதன்மீது முறையாகப் புறக்குறிப்பிடப்பட்டு அடகுபிடிப்பவருக்கு அடகுப் பற்றுச்சீட்டின் இதழை ஒப்படைப்பதற்கு இயலாதுள்ளேன் என்றும் பயபக்தியாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துகிறேன்.

"அ", "ஆ" இன் கையொப்பம் .............................

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பொருள்/பொருட்கள் பின்வருமாறாகும்:
.........................................................................................................................................

..................... ("இ", "ஈ") ஆகிய நான், சொல்லப்பட்ட நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, மேற்போந்த வெளிப்படுத்துகையைச் செய்கின்ற ஆள் .......................... என்னுமிடத்தைச் சேர்ந்த ......................... என்பவரான ("அ", "ஆ") ................................ என்பதை நான் அறிந்துள்ளேன் என பயபக்தியாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துகிறேன்.

"இ", "ஈ" இன் கையொப்பம் .....................................

20.......... ஆம் ஆண்டு................. ஆந்நாளாகிய இன்று என்முன்னர் வெளிப்படுத்தப்பட்டது.

................................................
சமாதான நீதவான்

(இறப்பர் முத்திரை)

(பிரிவு 28)

படிவம் - "ஊ"

**அடகுப் பற்றுச்சீட்டின் இதழ் காணாமற்போனமை முதலியனபற்றிய வெளிப்படுத்துகை**

இவ்வெளிப்படுத்துகை பொய்யானதாயின் வெளிப்படுத்துகையைச் செய்யும் ஆள் தண்டிக்கப்படற்பாலவராகவுள்ளார்.

................................ என்னுமிடத்தைச் சேர்ந்தவரும் ............................ ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை/கடவுச்சீட்டை வைத்திருப்பவருமான ............................... ஆகிய நான் (அ/ஆ), அடகுபிடிப்போர் நியதிச்சட்டத்தைப் பின்பற்றி, அடகுபிடிப்பவரான ............................... என்பவரின் கடையில் ................................................. என்பவர் கீழே விவரிக்கப்பட்ட பொருளை/பொருட்களை அடகு வைத்து அதற்கான பற்றுச்சீட்டின் இதழைப் பெற்றாரென்றும், அடகுப் பொருளை மீட்கும் நோக்கத்துக்காக, சொல்லப்பட்ட ............................ என்பவர் (அடகுவைத்தவர்) இறந்துள்ளமை காரணமாக /ஒரு சட்ட இயலாமைக்குட்பட்டுள்ளமை காரணமாக, அதாவது, ................................ (சட்ட இயலாமையின் தன்மை), சொல்லப்பட்ட (அடகுவைத்தவரின்) கையொப்பம் அதன்மீது முறையாகப் புறக்குறிப்பிடப்பட்டு அடகுபிடிப்பவருக்கு அடகுப் பற்றுச்சீட்டின் இதழை ஒப்படைப்பதற்கு இயலாதுள்ளேன் என்றும் பயபக்தியாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துகிறேன்.

"அ", "ஆ" இன் கையொப்பம் .........................

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பொருள்/பொருட்கள் பின்வருமாறாகும்:
..........................................................................................................................................

.................................. ("இ", "ஈ") ஆகிய நான், சொல்லப்பட்ட நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, மேற்போந்த வெளிப்படுத்துகையைச் செய்கின்ற ஆள் .................................... என்னுமிடத்தைச் சேர்ந்த .............................. என்பவரான ("அ", "ஆ") ....................... என்பதை நான் அறிந்துள்ளேன் என பயபக்தியாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துகிறேன்.

"இ", "ஈ" இன் கையொப்பம் ...................

20........ ஆம் ஆண்டு............. ஆந்நாளாகிய இன்று என்முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

...................................................................
சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்
(இறப்பர் முத்திரை)

(பிரிவு 32)

படிவம் "எ"

**பற்றுச்சீட்டு** திகதி:.................

................................................ ஆம் இலக்க அடைவுப்பொருள் மீட்கப்பட்டதன்மீது பெறப்பட்டது.

| | ரூபா. சதம் | ரூபா. சதம் |
|---|---|---|
| கடன் தொகை | .................... | .................... |
| இலாபம் அல்லது வட்டி | .................... | .................... |
| தொழில் மொத்த விற்பனை வரவு வரி | .................... | ................... |

| | |
|---|---|
| | |
| | |

........................................................
அடகு வைப்பவரின் கையொப்பம்

*(பிரிவு 20)*

## அட்டவணை - II

**வட்டிவீதம்**

கடனாகக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாவின் மீதும் அல்லது ஒரு ரூபாவின் பின்னத்தின் மீதுமான வட்டிவீதம், ஒரு மாதத்துக்கு அல்லது அதன் பாகத்துக்கு இரண்டு சதமாதல் வேண்டும்.

**வரிக்கொடுப்பனவு**

ஓர் அடைவுப்பொருள்மீது வழங்கப்பட்ட கடன்மீது அடகுபிடிப்பவரினால் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான வரி செலுத்தப்படற்பாலதாக இருக்குமிடத்து, அத்தகைய வரி அடகுவைப்பவரிடமிருந்து அறவிடப்படலாம்.

**அதிகரித்த வட்டியின் அறவீட்டை மட்டுப்படுத்துதல்**

அடகுபிடிப்பவர் எத்திகதியிலிருந்தும் அதிகரித்த வட்டிக்கு உரித்துடையவராகவிருக்குமிடத்து, அத்தகைய திகதிக்கு முற்போந்த நாளன்று மு.ப. 8.00 மணிக்கும் பி.ப. 8.00 மணிக்குமிடையே அடகுபிடிப்பவரின் கடை மூடப்பட்டிருந்தமை காரணமாக, அத்தகைய திகதிக்கு முன்னர் அடைவுப்பொருளை மீட்பதற்கு அவர் தவறினாரென நியாயாதிக்கங்கொண்டுள்ள குடியியல் நீதிமன்றத்தின் திருப்திக்கு அடகுவைப்பவர் காண்பித்தால் அத்தகைய அதிகரித்த வட்டி அறவிடப்படற்பாலதாதலாகாது.

அடகுப் பற்றுச்சீட்டுத் தொடர்பான அடைவுப்பொருள் அடைவுவைத்த நாளிலிருந்து பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் மீட்கப்படாவிடின் அது பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படுவதற்கு உட்பட்டதாகவுள்ளது.

விற்பனையில் ஏதேனும் மேன்மிகையான இலாபம் தேறிப்பெறப்பட்டு அத்தகைய விற்பனைத் திகதியிலிருந்து ஓராண்டினுள் அடகுவைப்பவரினால் அது உரிமைகோரப்படாவிடின், சொல்லப்பட்ட இலாபம் மாகாணசபை நிதியத்தில் அடகுவைத்தவரின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*(பிரிவு 32)*

## அட்டவணை - III

### அடைவுப் பொருட்களை ஏல விற்பனை செய்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்

(1) ஏல விற்பனையாளர் எல்லா அடைவுப்பொருட்களையும் பொதுமக்கள் பார்க்கக் கூடியவகையில் வெளிக்காட்டி வைக்கச் செய்தல் வேண்டும்.

(2) ஏல விற்பனையாளர், பின்வருவனவற்றைக் கொண்டுள்ள அடைவுப்பொருட்கள் பற்றிய பட்டியலை வெளியிடுதல் வேண்டும்:

(அ) அடகுபிடிப்பவரின் பெயரும் தொழிலிடமும்.

(ஆ) ஒவ்வோர் அடைவுப் பொருளும் அடகுவைக்கப்பட்ட மாதம்.

(இ) அடகுவைத்த நேரத்தில் அடைவுப்பொருள் புத்தகத்தில் பதியப்பட்டவாறு ஒவ்வோர் அடைவுப்பொருளினதும் இலக்கம்.

(3) பட்டியற் புத்தகத்தில் ஒவ்வோர் அடகுபிடிப்பவரினதும் அடைவுப்பொருட்கள், வேறெவரேனும் அடகுபிடிப்பவரின் எவையேனும் அடைவுப் பொருட்களிலிருந்து தனிவேறாகக் காட்டப்படுதல் வேண்டும்.

(4) ஏல விற்பனையாளர், சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாள்களில் ஆகக்குறைந்தது ஒன்றிலேனும் வெளியிடுவதன் மூலம்/விளம்பரப்படுத்துவதன் மூலம் விற்பனைப் பற்றிய அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், விற்பனை நடாத்தப்படவுள்ள இடப்பரப்பினுள் மக்கள் கூடுமிடங்களில் விளம்பரங்கள் பின்வரும் விபரங்களை உள்ளடக்குதலும் வேண்டும்:

(அ) அடகுபிடிப்பவரின் பெயரும் தொழிலிடமும்; அத்துடன்

(ஆ) அடைவுப்பொருட்கள் அடகு வைக்கப்பட்ட மாதம்.

(5) விளம்பரமானது அதே செய்தித்தாள்களில் இருநாட்களில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், இரண்டாவது விளம்பரம், விற்பனையின் முதலாவது நாளுக்கு ஆகக்குறைந்தது பத்து முழுநாட்களுக்கு முன்னரேனும் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(6) அடகுபிடிப்பவரொருவர் விற்பனையில் விலைக் கூறும்போதெல்லாம் ஏலவிற்பனையாளர், அதே விற்பனையில் அவர் வேறாட்களின் விலைகூறல்களை எவ்வடிவத்தில் எடுக்கின்றாரோ அவ்வடிவம் தவிர்ந்த வேறு எந்த வடிவத்திலும் விலைகூறலை எடுத்தலாகாது. அத்துடன் அடகுபிடிப்பவர் பொருளொன்றை வாங்கும்போது ஏலவிற்பனையாளர், அடகுபிடிப்பவரின் பெயரை, சொல்லப்பட்ட பொருளைக் கொள்வனவு செய்பவராக உடனடியாகக் கேட்கக்கூடிய முறையில் வெளிப்படுத்தல் வேண்டும்.

(7) ஏலவிற்பனையாளகர்ஷ, 14 நாட்களினுள், அவ்வடகுபிடிப்பவரின் அடைவுப்பொருட்கள் தொடர்பாக, அவ்வடகுபிடிப்பவரின் அடைவுப்பொருட்கள் எத்தொகைக்காக விற்பனை செய்யப்பட்டனவோ அத்தொகைகளைக் கொடுக்கின்றதும் அவரின் கையொப்பத்தினால் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்டதுமான பட்டியலின் பிரதியொன்றை அடகுபிடிப்பவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(8) அடகுபிடிப்பவர் அத்தகைய ஒவ்வொரு பட்டியலையும் ஏலவிற்பனையின் பின்னர் ஆகக்குறைந்தது இரண்டாண்டுகளுக்கேனும் பேணிக்காத்தல் வேண்டும்.

[பிரிவு 51]

**அட்டவணை IV**

படிவம் "அ"

வைப்பு தவணைதவறப்படுவதன்மீது அடகுபிடிப்பவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தல்

மாகாண ஆணையாளர்
அலுவலகம்/
................................

திரு./திருமதி ................................
................................
................................

அன்புள்ள ஐயா/அம்மணி,
அடகுபிடிப்பவரின் பெயர்:-
தொழிலிடத்தின் முகவரி:-

<u>பிணைப்பொறுப்பாகவுள்ள வைப்பின் தவணை தவறுகை</u>

<u>உரிம இல.: ..............................</u>

2017 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, வடமாகாண அடகுவைப்போர் நியதிச்சட்டத்தின் 50 ஆம் பிரிவின் நியதிகளின்படி வைப்புக் கொடுப்பனவுகளில் நீர் தவணைதவறியுள்ளீரெனக் காணப்பட்டுள்ளது. அதனோடு சம்பந்தப்பட்ட விபரங்கள், இதனோடு இணைக்கப்பட்டுள்ள படிவம் 2 இல் காட்டப்பட்டுள்ளன.

இவ்வைப்பானது ஏலவே செலுத்தப்பட்டுள்ளதாவென்பதை எனக்குத் தாமதமின்றி அறிவிப்பதற்குத் தயவாகக் கோரப்படுகின்றீர். அனுப்புகைகள் செய்யப்பட்டிருப்பின், அப்பயன்பட்ட பற்றுச்சீட்டுகள், ஆவணங்கள் அல்லது ஏதேனும் கடிதத்தை எனக்கு வழங்கவும். கொடுப்பனவுகள் செய்யப்படாதிருப்பின், இதனோடிணைக்கப்பட்டுள்ள படிவம் 2 இல் சுட்டிக்காட்டப்பட்டவாறு முழுத்தொகையையும் மாகாண ஆணையாளர் அலுவலகத்தில் செலுத்தும்படியும் அடுத்த இருவாரங்களினுள் எனக்கறிவிக்கும்படியும் அல்லது இவ்வறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து 14 நாட்களினுள், இறைவரி ஆணையாளரின் பெயரில் எழுதப்பட்டதும் படிவம் 2 இல் சுட்டிக்காட்டப்பட்டவாறு முழுத்தொகைக்கானதுமான காசோலையைப் பதிவஞ்சலில் எனக்கனுப்பும்படியும் உமக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

இவ்வறிவித்தலுடன் இணைந்துள்ள மேலதிகத் தகவல் உமக்குத் தேவையாயின், அத்தகைய தகவல், இவ்வறிவித்தலிலிருந்து இருவாரங்களினுள் உம்மால் செய்யப்படும் எழுத்திலான கோரிக்கையின் மூலம் இவ்வலுவலகத்திலிருந்து பெறப்படலாம்.

அடுத்த இரு வாரங்களினுள் இவ்வறிவித்தலுக்கான எழுத்திலான பதிலெதுவும் அல்லது கொடுப்பனவைச் செய்வதற்கான மறுமொழியெதுவும் பெறப்படாத விடயத்தில், சொல்லப்பட்ட நியதிச்சட்டத்தின் நியதிகளின்படி தவணை தவறிய வைப்பை அறவிடுவதற்காக நீதிவான் நீதிமன்றத்தில் அல்லது மாவட்ட நீதிமன்றத்தில் உமக்கெதிராகச் சட்ட நடவடிக்கை தொடுக்கப்படுமென உமக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

தங்கள் விசுவாசமுள்ள,

மாகாணஆணையாளர்.

மாகாணஆணையாளர் அலுவலகம்,
............................ (இலச்சினை)
............................
திகதி:

ஏற்புடையதற்றதை நீக்கிவிடுக.

படிவம் "ஆ"

**51 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான விபரங்கள்**

1. தவணை தவறுகின்ற அடகுபிடிப்பவரின் பெயர்: .............................................................
2. தொழிலிடத்தின் பெயரும் முகவரியும் : .................................................................................
3. உரிம இலக்கம் : .......................................................................................................................
4. தவணை தவறியுள்ள மொத்தப் பணத்தொகை : .......................................................................
5. தவணை தவறியுள்ள காலப்பகுதி : ..........................................................................................
6. செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு : ....................................................................................
7. வருமதியான மீதிக் கொடுப்பனவு : ..........................................................................................

மாகாணஆணையாளர்

இலச்சினை:

மாகாணஆணையாளர் அலுவலகம்
.........................................

.........................................

திகதி:

படிவம் "இ"

**51 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான சான்றிதழ்**

1. தவணை தவறுகின்ற அடகுபிடிப்பவரின் பெயர்: ..........................................................................
2. தொழிலிடத்தின் பெயரும் முகவரியும் : ..............................................................................................

3. வைப்பு தவணை தவறப்பட்ட காலப்பகுதி : ..........................................................................................

4. தவணை தவறப்பட்ட வைப்பு உதவுதொகைகளின் கூட்டுமொத்தம் : ................................................

5. செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு : ..........................................................................................

6. வருமதியான மீதிக் கொடுப்பனவு : ..........................................................................................

மாகாண ஆணையாளர்

இலச்சினை :

மாகாண ஆணையாளர் அலுவலகம்
.................................
.................................

திகதி:

04 - 664